Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

பக்கங்கள் - 12

மக்கள் நாளிதழ்

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி-13 | 28-07-2004 | புதன்கிழமை | ஓசை -161




- சந்திரிகா-ஹெல்கேசன் சந்திப்பு -

# இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேச

# சனாதிபதி சந்திரிகா பின்னடிப்பு

## 2000ஆம் ஆண்டு தீர்வுப் பொதியை திருத்தியமைப்பது குறித்துப் பிரஸ்தாபிப்பு

**சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனுக்கும் இடையிலான நேற்றைய சந்திப்பில், விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான நகல் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக் களை ஆரம்பிப்பதற்குச் சனாதிபதி சந்திரிகா பின்னடித்த அதேவேளை, சில மாற்றங்களுடன் 2000 ஆண்டில் பொ.ஐ.முன்னணி அரசாங்கம் முன்வைத்த தீர்வுப்பொதியின் அடிப்படையில் பேச்சுக்களை [illegible]பிக் கலாம் எனச் சனாதிபதி சந்திரிகா தெரிவித்தாக சனாதிப[illegible] வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.**

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனுக்கும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

இரவு 7.00 மணி தொடக்கம் 9.00 மணி வரையான இரண்டு மணி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவிலில் பார ஊர்தியுடன் மோதி உந்துருளியில் சென்ற இளைஞன் பலி

### - சகோதரன் படுகாயம்

தென்மராட்சி-மட்டுவில் பகுதியில் இடம் பெற்ற கோரவிபத்தில் இளைஞா ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை 5.30 மணியளவில் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவிலின் அருகே இடம் பெற்ற மேற்படி விபத்தில் பத்தமேனி அச்சுவேலியைச் சேர்ந்த சிவலோகநாதன் ராஜரூபன் (வயது 24) என்ற இளைஞரே பலியானவராவார். இவரது சகோதரனான சிவலோகநாதன் ராஜ்குமார் (வயது 22) படுகாயம் அடைந்தார். சகோதரர்கள் இருவரும் மோட்டார் சைக்கிலில் மட்டுவில் நோக்கிச் சென்று [illegible]ருந்த போது எதிரே வந்த பாரஊர்தியு டன் மோதுண்டதை அடுத்தே [illegible]ரூபன் ஸ்தலத்தில் பலியாகியுள்ளார். படுகாயமடைந்த ராஜ் குமார் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப் பட்டுள்ளார். பலியானவரின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (36,27)

## கொட்டாவ சம்பவத்துடன் புலிகள் தொடர்புபட்டுள்ளதாகக் கூறமுடியாது

### -பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

கொட்டாவ பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் விடுதலைப்புலிகள் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறமுடியாதுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்கேரத் தெரிவித்திருக்கின்றார். இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதானால் தெளிவான ஆதாரங்கள் இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## மன்னார் அடம்பனில் இன்று தமிழீழ மாவட்ட நீதிமன்றம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ நீதிநிர்வாகத் துறையினரால் மன்னார் மாவட்ட நீதிமன்றம் இன்று மன்னாரில் திறந்து வைக்கப்பட உள்ளது.

இன்று காலை 10.00 மணிக்கு மன்னார் அடம்பன் பிரதேசத்தில் இந்நீதிமன்றம் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப் பட்டுள்ள பகுதிகளில் சட்டத்தையும், ஒழுங்குகளையும் நிலை நாட்டும் வகையில் நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)

## போராளிகளின் குருதி, சதையால் உரமேறிய மண்ணிலேயே உப்பு ஆலை இயங்குகிறது

### ஆனையிறவு உப்புஆலை திறப்புவிழாவில் தங்கன்

(அலுவலக செய்தியாளர்)

எதிரியுடைய ஆக்கிரமிப்பிலிருந்த இந்தப் பிரதேசம் எமது ஆயிரக்கணக்கான போராளிகள் வீரச்சாவடைந்தும் விழுப்புண் அடைந்துமே மீட்கப்பட்டது. இந்தப் பிரதேசத்திலே மீண்டும் இந்த உப்பு உற்பத்தி ஆலை எங்கள் போராளிகளுடைய குருதியும் சதையும் பரந்து உரமாக்கியிருக்கிற மண்ணிலே தான் இயங்க ஆரம்பித்திருக்கிறது என அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

ஆனையிறவில் உப்பு உற்பத்

(12ஆம் பக்கம் பார்க்க)




## கிளிநொச்சி காவல் பணிமனையில்

## பாதுகாக்கப்படும் மனித எலும்புக்கூடுகளை சர்.செஞ்சிலுவை பிரதிநிதிகள் பார்வையிட்டனர்



கிளிநொச்சி காவல் பணிமனையில் பாதுகாக்கப்பட்டு வரும் மனித எலும்புக்கூடுகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் நேற்றுப் பார்வையிட்டுள்ளனர்.

சிறிலங்காப் படையினரால் கிளிநொச்சி நகரம் கைப்பற்றப்பட்டபோது தமது வீடுகளைப் பார்வையிடவும், பிறகாரணங்களுக்காகவும் அப்பகுதிகளுக்கு சென்ற போது கைது செய்து படுகொலை செய்யப்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## முக்கிய அறிவித்தலொன்றை நாளை விதார் ஹெல்கேசன் வெளியிடுவார்

இலங்கையின் இனப்பிரச்சனை விடயம் குறித்து நோர்வே அரசாங்கம் நாளை முக்கியமான அறிவித்தல் ஒன்றை வெளியிடவுள்ளதாக கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இலங்கை வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் சந்தித்திருந்தார்.

நேற்றுச் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா, பிரதமர் மகிந்தராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோரையும் சந்தித்திருந்தார். இச் சந்திப்புக்களின் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங் கத்தை எதிர்வரும் வெள்ளிக்கிழமை சந்தித்துப்பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு லண்டன் செல்ல முன்னர் அவர் முக்கியமான அறிவித்தல் ஒன்றை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அன்ரன் பாலசிங்கத்துடன் விதார்ஹெல்கேசன் சந்திப்பு

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான கலாநிதி அன்ரன்பாலசிங்கம் அவர்களை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் சந்தித்துப்பேசவுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இறைச்சிக்கான மாட்டின் உயிர் விலை 85 ரூபா

### - *நேற்றைய தகவல் தவறு*

விவசாயிகளும், கால் நடை வளர்ப்பாளர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக நேற்றுத் வெளிவந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### செல்போன் தவறிவிட்டது

23.07.2004இல் வட்டக்கச்சி மாயவனூர் சிவன் கோவிலுக்கும் இரணைமடுக் குளத் திற் கும் இடையில் கையடக்கத் தொலை பேசி (செல்போன்) மற்றும் பயண அனுமதி அட்டையும் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி ஈழ நாதம் பணிமனையிலோ அல்லது வட்டக்கச்சி வன்னியன் தொலைத் தொடர்பு நிலையத்திலோ ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும் தகவல் ச.பவளம் புதுக்காடு வட்டக்கச்சி.

(சி-10040)

### பி.எஸ்.ரி.தொழில் நுட்பம்

கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. கணினிதரவூட்டுனர் தேவை கணனி அறிவுடைய TYpe setting செய்யக் கூடிய ஒருவர் தேவை சனி,ஞாயிறு தினங்களில் (31.07. 2004 அல்லது 1.08.2004) 9மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் நிறுவனத்தில் தொடர்பு கொள்ளவும்வேதனம், வேலை நடை முறைகள் நேரில் பேசித தீர்மா னிக்கப்படும். நிர்வாகம். (4855)

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத் தேவையான தென்னை, மாதுளை, பலா, மா, எலுமிச்சை (தேசி), தோடை, கயூ, கமுகு, கொய்யா, கொடித்தோடை, நெல்லி, சவுக்கு,சமண்டலை, தவசி, அகத்தி, கறிவேப்பிலை, தூது வளை, பப்பாசி (றெட்லேடி) போன்ற பலதரமான நல்லின நாற் றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங் கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (9895)

## டக்ளசுடன் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெல் கேசன், அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவுடன் நேற்றுமுன்தினம் இரவு சந்திப்பொன்றை நடத்தி யுள்ளதாக ஈ.பி.டி.பி வெளியிட் டுள்ள ஊடக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின் போது சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல் லப்பட வேண்டுமென்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரிடம் வற்புறுத்தியதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.நாட்டில் தற்போது இடம் பெறும் படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்கு நோர்வே முயற்சி களை மேற்கொள்ள வேண்டு மென்று வலியுறுத்தியதாகவும் கூறப்பட்டுள்ளது.

## வரலாறு காணாத மலிவு விற்பனை

**கொழும்பு ஜெயா புக் சென்ரரின்** அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| காலம் :- | 2004 ஜூலை 19 முதல் 29 வரை |
| நேரம்:- | தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்) |
| இடம்:- | யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம். |

- சகலருக்கும் இலங்கை நூல்களிற்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகள் (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொது நிறுவனங்கள், பிரதேசசபை, நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:-
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-10116)

### தமிழீழ போக்குவரத்துக் கழகம்

தொழில் நுட்பவியலாளர் (வாகனமெக்கானிக்)

## பயிலுநர் தேவை

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நேரில் விண்ணப்பங்களுடன் வருகைதருமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள் :-**

1. கல்வித்தகைமை :- ஆண்டு 08
2. அகவை :- 18தொடக்கம் 23வரை

**குறிப்பு:-**

1. 04.08.2004 ஆம் நாள் விசுவமடு றெட் பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அரு காமையிலுள்ள தமிழீழப் போக்கு வரவுக் கழகம் நடுவப்பணிமனைக்கு வருகைதரவும்.
2. பயிற்சிக் காலத்தில் சம்பளம் வழங்கப்படும்
3. உறுதிப்படுத்தும் சான்றுகளுடன் வருக.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப்போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

((சி.9761)

## வீரவணக்கம்

04ஆம் ஆண்டு நீங்காத நினைவில்.........



தமிழீழ காவல்துறை
உப பரிசோதகர்
**ஜெ.சந்திரமோகன்**
ஜெகசோதி. சந்திரமோகன்
நி.மு. கருநாட்டுக்கேணி, மணலாறு
தாயின்மடியில் 18.12.1978
தாயக மண்ணில்-28.07.2000

நாகர் கோவில் பகுதியில் சிறிலங்கா இராணு வத்துடனான நேரடிமோதலின்போது 28.07.2000 அன்று வீரச் சாவடைந்தார்.



தமிழீழ காவல்துறைத் தலைமைக்
காவலர்
**சந்திரகாந்தன்**
நாகமுத்து. சந்திர காந்தன்
நி.மு.யாழ் மாவட்டம்.
த.மு. புத்தடி கிழக்கு, விசுவமடு
தாயின்மடியில்14.08.1977
தாயகமண்ணில் 28.07.2000

ஓயாத அலைகள் 03(மூன்று) நடவடிக்கையின் போது நாகர் கோவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது 28.07.2000 அன்று வீரச்சாவடைந்தார்.

இம்மாவீரகளுக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**"தமிழீழ காவல்துறையினர்"**

(4844)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மடியில் மலர்ந்தது 21-07-1977

மண்ணிற்காய் உதிர்ந்தது 28-07-2000

### மேஜர் நம்பிமாறன் / கெங்காதரன்

**குமாரசாமி நவீனன்**

ஆண்டு நாலாச்சு நவீனா! அனுவளவும் ஆறவில்லை நாங்கள்
காணத் துடிக்கின்றோம் கல்லறைதான் கழுவுகிறோம்.
மாறனே எங்கு சென்றாய்? மலர் தூவ எமைவிட்டு
பறந்து வந்துவிட்டார் பங்குனித்திங்களிலேஅப்பாவும் ஆறுவமோ நாங்கள்
அவனியிலே உள்ளவரை மாறுமோ எம் கவலை மாறனே கூறுவாயா?

மாவீரரான மாறனோடு அனைத்து மாவீரரையும்
இந்நாளில் நினைவு கூருகின்றோம். (4857)

ஆறாத்துயரில்
குடும்பத்தினர்.

# சூடானிற்கெதிராகப் பொருளாதாரத் தடை

# ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அமெ.பிரேரணை

## – தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலென்கிறது சூடான்

**சூடானிற்கெதிராக ஐ.நா பாதுகாப்புச்சபையில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள பொருளாதாரத் தடைப் பிரேரணை சூடானின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையுமென்று சூடானிய அரசாங்கம் எச்சரித்துள்ளது.**

சூடானின் டார்பர் பிராந்தியத்தில் இடம் பெற்று வருகின்ற தாக்குதல்கள் உட்பட்ட சகல வித நடவடிக்கைகளையும் அந்த நாட்டு அரசாங்கம் கட்டுப்படுத்த தவறியிருக்கின்றதென்றும் இதன் காரணமாக சூடானிற் கெதிராகப் பொருளாதாரத் தடைகள் கொண்டு வரப்பட வேண்டும் மென்ற வகையில் அமெரிக்கா தீர்மான மொன்றை ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்க உள்ளது.

இந்தப்பிரேரணைக்கு சீனா, பாகிஸ்தான் உட்பட பல நாடுகள் ஆட்சேபனை தெரிவித்துள்ளன. இதேவேளை இப்பகுதியில் இடம் பெற்றுவரும் தாக்குதல்கள் காரணமாக 30 ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் இதுவரை கொல்லப்பட்டிருக்கின்றார்களென்றும், 10 இலட்சம் பேர் தங்களது சொந்த இடங்களைவிட்டு வெளியேறி இருப்பதாகவும் மிகுதி 20 இலட்சம் பேருக்கு உணவுப் பொருள் விநியோகம் உடனடியாக மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் சூடான் அரசாங்கம் பிரிட்டிஸ் மற்றும் ஜேர்மன் இராஜதந்திரிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்து அந்நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடவேண்டாமென்று கேட்டுள்ளது.

பாதுகாப்புச் சபையில் கொண்டு வரப்படவிருக்கும் அமெரிக்க பிரேரணை சூடானின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கின்றதென்றும் சூடான் அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது. டார்பர் பிராந்தியத்தைப் பாதுகாப்பதற்கு ஐயாயிரம் பிரிட்டிஷ் வீரர்களை அனுப்பமுடியும் என்ற வகையில் பிரிட்டனின் இராணுவத்தளபதி தெரிவித்த கருத்திற்கு சூடான் வெளியுறவு அமைச்சர் கண்டனம் தெரிவித்துள்ளார். இதேவேளை சூடானிற்கான மனிதாபிமான உதவியை அவுஸ்திரேலியா அதிகரிக்கவிருப்பதாக கன்பராவில் வெளிவிவகார அமைச்சர் லிக்சாண்டே டௌனர் தெரிவித்துள்ளதுடன் ஏற்கனவே வழங்கப்பட்ட 80 இலட்சம் டொலர்களுக்கு மேலதிகமாக ஒரு கோடி 20 இலட்சம் டொலர்களை சூடானில் மேற்கொள்ளப்படும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்குத் தமது நாடு உதவும என்றும் அவா மேலும் தெரிவித்துள்ளார்.



ஈராக்-பகோபாவில் தேசிய பாதுகாப்பிற்கு புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட இராணுவ வீரர்கள் அமெரிக்க இராணுவ முகாம் ஒன்றில் நடைபெறும் பயிற்சியின் போது.

# ஜோர்தான் சாரதிகள் இருவர் ஈராக் தீவிரவாதிகளால் கடத்தல்

(பாக்தாத்)

ஈராக் தீவிரவாதிகள் ஜோர்தானைச் சேர்ந்த இரண்டு சாரதிகளை கடத்திச் சென்றுள்ளனர்.

ஏற்கனவே இந்தியர்கள் மூவர் உட்பட ஏழு பேரைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ள நிலையில் நேற்று முன்தினம் புதிதாக ஜோர்தானைச் சேர்ந்த சாரதிகள் இருவரையும் கடத்திச் சென்றுள்ளனர்.

இதேவேளை தற்போது ஒன்பது பேர் ஈராக் தீவிரவாதிகள் 20 ஆம் பணயக் கைதிகளாகவுள்ளனர்.

அத்துடன் இவர்களை விடுவிப்பதற்கான காலக்கெடுவினை நேற்று முன்தினம் நீடிப்பும் செய்துள்ளனர். இவர்களை விடுவிக்க வேண்டுமானால் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்குப் பேச்சுவார்த்தை அவசியம். அதற்காகவே காலக்கெடுவை நீடிப்புச் செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

அத்துடன் கடத்தப்பட்டவர்கள் தொடர்பில் தீவிரவாதிகளின் புதிய அறிவித்தல் ஒன்றையும் நேற்று விடுத்துள்ளனர். அதில் கடத்தப்பட்டவர்களின் தலைகளை இம்முறை துண்டிக்கப்போவதில்லை என்றும் கூறியிருப்பது கடத்தப்பட்டவர்களின் உறவினர்களினிடையே நிம்மதியை உருவாக்கியுள்ளது என்பது குறிப்பிட்டத்தக்கது.

இதேவேளை ஏற்கனவே கடத்தப்பட்ட ஈராக்கிலுள்ள ஜோர்தான் தூதரக அதிகாரி ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



வெள்ளத்தில் மூழ்கியுள்ள தனது வீட்டின் ஒரு பகுதியில் நின்று வெள்ளத்தில் மூழ்கிப் போயுள்ள வீதியை அவதானிக்கும் பங்களாதேஷ் வாசி யொருவர்.

## மாநாடு

(ஜெனீவா)

ஜெனீவாவிலுள்ள உலகவர்த்தக ஸ்தாபனத்தின் தலைமையலுவலகத்தில் 25 இற்கும் அதிகமான நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் முக்கிய கூட்டமொன்றினை நேற்று நடத்தியுள்ளனர். [illegible] நிலையினை அடைந்[illegible] தாரா[illegible]மய வர்த்தகம் குறித்த பேச்சு[illegible]தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வழிவகைகளைக் காண்பதே அவர்களது நோக்கமாகும்.

# தீவிரவாதிகள்-ராணுவம் மோதல் ஜம்முகாஷ்மீரில் 10 பேர் பலி

## –இராணுவ அதிகாரி நிரூ சாக்சேனா

இந்திய எல்லையில் ஊடுருவ முயன்ற ஹர்கத்-உல்-ஜிஹாடி இஸ்லாமி(ஹுஜி) தீவிரவாத அமைப்பின் பகுதி கமாண்டர் உட்பட தீவிரவாதிகளை இந்திய இராணுவம் சுட்டுக்கொன்றது.

ஜம்முகாஷ்மீர் மாநிலம் தோடா மற்றும் பூஞ்ச் மாவட்டங்களில் இந்திய எல்லைக்குள் தீவிரவாதிகள் ஊடுருவ முயல்வதாக இராணுவத்திற்குத் தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து தோடா மாவட்டத்தில் இராணுவத்தினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது மறைந்திருந்த தீவிரவாதிகளுக்கும், இராணுவத்துக்கும் ஏற்பட்ட மோதலில் இரு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். மற்ற தீவிரவாதிகள் தப்பி ஓடிவிட்டனர். 303 துப்பாக்கிகள் உட்பட ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இதே மாவட்டத்தில் வேறொரு இடத்தில் நடைபெற்ற மோதலில் ஹுஜி அமைப்பைச்சேர்ந்த மற்றொரு தீவிரவாதி இறந்தார்.

பூஞ்ச் மாவட்டத்தில் நடைபெற்ற மற்றுமொரு மோதலில் இன்னொரு தீவிரவாதி கொல்லப்பட்டார். ஜம்மு மாவட்டத்தில் ஹிஷ்புல் முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்த இரு தீவிரவாதிகள் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் கொல்லப்பட்டனர். குப்வார் மாவட்டத்தில் நடைபெற்ற மோதலில் ஒரு தீவிரவாதி உயிரிழந்தார். அனந்தநாக் மாவட்டத்தில் ஒரு தீவிரவாதி கொல்லப்பட்டார். இதே மாவட்டத்தில் கிராமவாசி ஒருவரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர்.

# தீவிரவாதியென்ற சந்தேகத்தில் பிறவியிலேயே பார்வையற்றவர்

தீவிரவாதச் செயலில் ஈடுபட்டதாக 5 ஆண்டுகளாக சிறையிலடைக்கப்பட்டுள்ளார் உத்தரப் பிரதேசத்தைச்சேர்ந்த பிறவியிலேயே பார்வையற்ற ஒருவர், உத்தரப் பிரதேச மாநிலம் முசா..பர் பாத் நகரைச் சேர்ந்தவர் சலீம் அகமது பிறவியிலேயே பார்வையற்றவர். இடது கையும் செயலற்றவர். இவர் 1999 இல் ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பட்காமிலில் தீவிரவாதச் செயலில் ஈடுபட்டதாகவும், வெடிபொருட்களை உற்பத்தி செய்ததாகவும் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து துப்பாக்கி ஒன்றைப் பொலிசார் கைப்பற்றினர். ஆனால் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி ஆபத்தானது இல்லை என்று சோதனையின் போது தெரியவந்தது. அஷாம்மாநிலத்திலும் இவர் மீது இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில் அஷாமிலிருந்து அவ்வப் போது வழக்குக்காக பட்காம் அழைத்து வரப்படுகிறார். சலீம் பிறவியிலேயே பார்வையற்றவனாகவும் ஒரே கையுடனும் உள்ள நான் எப்படி வெடி பொருள்களை உற்பத்தி செய்ய முடியும். தீவிரவாதச் செயல்களில் எப்படி ஈடுபட முடியும் என்கிறார் சலீம்.

# விஷ ஊசி மூலம் மரணதண்டனை 80 சதவீத நீதிபதிகள் ஆதரவு

கைதிகளுக்கு விஷ ஊசி மூலம் மரணதண்டனையை நிறைவேற்றும் முறைக்கு 80 சதவீத நீதிபதிகள் ஆதரவு தெரிவித்துள்ளனர். பாராளுமன்றத்தில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட மரணதண்டனையை நிறைவேற்றும் வகை குறித்த சட்டக் கமிஷனின் 187 ஆவது அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதி மன்றங்கள் மற்றும் கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகளிடம் இது குறித்து கருத்துக் கேட்கப்பட்டது. இதில் 80 சதவீத பேர் தற்போதைய தூக்குத் தண்டனை முறைக்கு ஆதரவு தெரிவித்தனர். இதே எண்ணிக்கையிலான நீதிபதிகள் கைதிகளுக்கு விஷ ஊசி மூலமும் மரணதண்டனையை நிறைவேற்றலாம் என ஆலோசனை தெரிவித்துள்ளனர். 5 சதவீத நீதிபதிகள் துப்பாக்கியால் சுட்டு மரணதண்டனையை நிறைவேற்றலாம் எனத் தெரிவித்துள்ளனர். மரண தண்டனையை எந்த வகையில் நிறைவேற்றவேண்டும் என்பதை கைதிகள் முடிவுக்கு விட்டுவிட 45 சதவீத நீதிபதிகள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# கொங்கோவில் அமைதிப்படைக்கு 243 இந்திய விமானப்படை அணி



கொங்கோவில் அமைதிப் பணியில் ஈடுபட ஐ.நா வின் வேண்டுகோளை ஏற்று 243 வீரர்கள் கொண்ட இந்திய விமானப் படைப் பிரிவு திங்கட்கிழமை புறப்பட்டுச் சென்றது. விமானப்படை தளபதி எஸ். கிருஷ்ணசாமி கொடியசைத்துப் பயணத்தைத் தொடக்கி வைத்தார். சுரங்கங்கள் நிறைந்த வளமான பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக கொங்கோவில் பல்வேறு குழுக்களிடையே போர் நடைபெற்று வருகிறது. காடுகள் நிறைந்த நாடு அது. அங்கு ஏற்கனவே அமைதிப் பணியில் இருக்கும் இந்திய வீரர்களுக்குப் பதிலாகத் தற்போது புதிய படை அனுப்பப்பட்டுள்ளது. இப்புதிய படைக்கு கப்டன் அலுவாலியா தலைமை தாங்குகின்றார். 5 எம்.ஐ 17 ஹெலிகொப்டர்கள், 4 எம்.ஐ 25கெலிஹொப்டர்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களைக் கொண்டுள்ளது இப்படை.

# முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு பேரவையை நோக்கி பா.ஜ.க. பேரணி

ஆந்திரத்தில் முஸ்லிம்களுக்கு 5 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரதிய ஜனதாக் கட்சி நாளை சட்டப் பேரவை நோக்கிப் பேரணி நடத்த உள்ளது. இதை மத்திய முன்னாள் அமைச்சரும், பாரதிய ஜனதா மூத்த தலைவருமான பண்டாரு தத்தாத்ரேய தெரிவித்துள்ளார். மத அடிப் படையில் ஆந்திர அரசு இட ஒதுக்கீடு அளிக்கத் திட்டமிட்டுள்ளது. ஒரு தேசியப் பிரச்சினை எனவே இதை எதிர்த்து பா.ஜ.க நாடு தழுவிய அளவில் விரைவில் போராட்டம் நடத்தும். சிறுபான்மையினருக்கும் பொருளாதார ரீதியாகப் பின் தங்கியவர்களுக்கும் இட ஒதுக்கீடு அளிப்பதை பாரதிய ஜனதா எதிர்க்கவில்லை. ஆனால் அதேசமயம் மதத்தின் பேரால் இட ஒதுக்கீடு அளிப்பதைத்தான் பா.ஜ.க எதிர்க்கிறது. பா.ஜ.க முஸ்லிம்களுக்கு எதிரான கட்சி அல்ல. இது போன்று இட ஒதுக்கீடு அளிக்கத் தொடங்கினால் ஒவ்வொரு மதமும் இட ஒதுக்கீடு கோரும் என்றார்.

# விசர்நாய்க் கடிக்குள்ளாகி பத்திற்கும் மேலானோர்

# தினமும் கிளி.மாவட்டவைத்திய சாலையில் சிகிச்சை

## -தடுப்பு மருந்து முடிவடையும் அபாயம்

(அலுவலக செய்தியாளர்)

**விசர்நாய்க் கடிக்குள்ளாகி தினமும் பத்திற்கும் மேற்பட்டோர் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் (ஏ.ஆர்.வி) சிகிச்சை மேற்கொண்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.**

இது குறித்து கிளி.மாவட்ட வைத்தியசாலை மருத்துவர் வைத்திய கலாநிதி யூடிரமேஸ் ஜெயக்குமாருடன் எமது செய்தியாளர்கள் தொடர்பு கொண்டபொழுது தெரிவிக்கையில்,

தற்போது யாழ்,வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளில் (ஏ.ஆர்.வி.) தடுப்பு மருந்திற்கு தட்டுப்பாடு நிலவிவருவதன் காரணமாக அப்பகுதியில் விசர் நாய்க் கடிக்குள்ளானவர்கள் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு வருகை தருவதன் காரணமாகவே இங்கு விசர்நாய்க் கடிக்கு சிகிச்சை மேற்கொள்பவர்களின் தொகை அண்மையில் அதிகரித்துள்ளதென வும்.

இதன் காரணமாக கிளி.மாவட்ட வைத்தியசாலையில் இருந்த (ஏ.ஆர்.வி) தடுப்பு மருந்து குறைந்து வருவதாகவும் தொடர்ந்தும் இவ்வாறு சிகிச்சை மேற்கொள்ளும்பட்சத்தில் குறிப்பிட்ட ஒரு சில தினங்களில் மாவட்ட வைத்தியசாலையில் உள்ள (ஏ.ஆர்.வி) தடுப்பு மருந்தின் கையிருப்பு தீர்ந்துவிடக்கூடிய ஏது நிலை தோன்றியுள்ள தெனவும் தற்போது கொழும்பு மத்திய மருந்தக மருந்துக் களஞ்சியத்தில் (ஏ.ஆர்.வி.) தடுப்பு மருந்து தீர்ந்து விட்டதென அறியக் கிடைத்துள்ள நிலையில் இம்மாவட்டங்களில் இனிவரும் நாட்களில் விசர்நாய்க்கடிக்குள்ளாவோரின் நிலை கவலைக்கிடமாக மாறக் கூடிய அபாயகரமான நிலை தோன்றக் கூடிய ஏது நிலை உள்ள தென கவலை தெரிவித்துள்ளார்.

(சோ.கு)

### கட்டாக்காலி நாய்களை அழிக்க வேண்டுகை

நெடுங்கேணிபிரதேசத்தில்கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.மேற்படி பிரதேசத்திற்குட்பட்ட கிராமங்கள் தோறும் வீதி வீதியாக கட்டாக்காலி நாய்கள் குட்டை,சொறி,புண்களுடன் நடமாடித திரிவதால் அவ்வப்பகுதி மக்கள் பெரும் அவலத்தை சந்தித்து வருவதுடன் விசர்நாய்க்கடிக்கும் உள்ளாகி வருகின்றனர். மேற்படி பகுதிகளில்கட்டாக்காலிநாய் அழிப்பு நடவடிக்கைமேற்கொள்ளப்படவேண்டும் எனமக்கள்எதிர்பார்க்கின்றனர்.. (ஆ)

# நெடுங்கேணி அரியாமடுக்குளம் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்பு

(முள்ளியவளை)

நெடுங்கேணி பிரதேசத்தில் உள்ள அரியாமடுக்குளம் நியாப்திட்ட நிதியுதவியுடன் அப்பகுதி கமக்கார அமைப்பினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

மேற்படி குளத்தின் கீழ் 400 ஏக்கர் நெற்செய்கை செய்யப்பட்டு வந்ததாகவும் இடப்பெயர்வு காரணத்தால் நீண்ட காலமாக நெற்செய்கை மேற்கொள்ளப்படாது இருந்த காலப்பகுதியில் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை மூலம் அப்பகுதியை ஆக்கிரமித்த சிறிலங்காப் படையினர் மேற்படி குளக்கட்டுக்களில் பதுங்கு குழிகளும், காப்பரண்களும் அமைத்து குளக்கட்டினை நாசமாக்கி வைத்திருந்தனர். மேற்படி குளத்தினை நியாப் திட்ட உதவியுடன் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வடிகால் அமைக்கும் வேலைகள் மட்டும் தற்போது செய்யவேண்டியுள்ளதாகவும் அவை விரைவில் அமைக்கப்பட்டு வேலைகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டு இவ்வாண்டு காலபோக நெற்செய்கைக்கு குளம் பயன்படுத்தப்படும் எனவும் அப்பகுதி கமக்கார அமைப்பு தலைவர் கனகரத்தினம் தெரிவித்தார்.

(ஆ)

# மக்கள் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலையின் சில சந்தேகத்திற்குரிய பகுதிகளில் கடந்த சனிக்கிழமை தமிழீழக் காவல்துறையினர் மற்றும் விடுதலைப்புலிகளின் மாவடி முன்மாரிக் கோட்டப்படையணிப் போராளிகளும் இணைந்து திடீர் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர். மக்களின் பாதுகாப்பு நலனைக்கருத்திற் கொண்டு குற்றச் செயல்கள் நடைபெறாமல் தடுக்கும் வகையில் நடாத்தப்பட்ட இத்தேடுதலின் போது வீடுவீடாகச் சென்ற தமிழீழக் காவல்த்துறையினர் மற்றும் போராளிகளால் கருத்துரைகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை இத்தேடுதல் நடர்வடிக்கையின் போது சில முக்கிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இரகசிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தமிழீழக் காவல்துறையினர் தெரிவித்தனர். இந்நடவடிக்கையினை தமிழீழக் காவல்துறையின் மட்டு. அம்பாறை மாவட்ட கண்காணிப்பாளர் ச.தமிழரசன், மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி ரமணன் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் துணைத்தளபதி யோகராஜ், மட்டு. அம்பாறை காவல் பணிமனைப் பொறுப்பாளர் அஜந்தன் ஆகியோர் நடவடிக்கை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பூநகரி பிரதேச சபையின் இறுதிநாள் உள்ளூராட்சி வார நிகழ்வு

பூநகரி பிரதேச சபையால் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு ஜெயபுரத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

பூநகரிப்பிரதேச சபையின் செயலாளர் திருமதி.செ.பவானியின் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு ஜெயபுரம் உதவி அரசாங்க அதிபர் உபபணிமனையில் நடைபெற்றது.

தமிழீழ தேசியக் கொடியினை ஜெயபுரம் அரசியல் துறைப் பொறுப்பாளர் கதிரொளி ஏற்றி வைக்க, மங்கல விளக்கினை கிளி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தி.தனபாலசிங்கம், உதவி அரசாங்க அதிபர் க.வயிரமுத்து, ஜெயபுரம் விநாயகர் ஆலயக்குரு கை.இராஜேஸ்வரக்குருக்கள் ஏற்றினர்.

அடுத்து மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பூநகரி பிரதேச சபையால் ஜெயபுரத்தில் உதவி அரச அதிபர் உபபணிமனையில் நூலகம் ஒன்று கிளி/ மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகத்தால் திறந்து வைக்கப்பட்டது. வரவேற்புரையை ஆயுர்வேத வைத்தியர் தில்லைநாயகம் நிகழ்த்த பின் சிறப்புரைகள் இடம் பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.குணரத்தினம், தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் பாண்டியன், பூநகரி ப.நோ.கூ.சங்க. பொது முகாமையாளர் ந.பாலசுப்பிரமணியம்,கோட்டக்கல்வி அதிகாரி தி.கணபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை செயலாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தனபாலசிங்கம், ஜெயபுர சமூகத் தொண்டர் இராசரத்தினம், தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பொ. தங்கராசா, முதன்மை விருந்தினர் தி.இராசநாயகம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். சிறப்புற செயற்பட்ட வர்த்தக நிலையம், அரிசிஆலை, உணவகம் போன்றவற்றிற்கு பரிசில்கள் வழங்கப் பட்டன.

# போரைத்திணிக்க அரசு முயற்சிக்கின்றது மக்கள் எதற்கும் தயாராக இருக்கவேண்டும்

## -வெலிக்கடை தியாகிகள் தின நிகழ்வில் செல்வம்அடைக்கலநாதன்

"போர் திணிப்பு வாய்ப்பை அம்மையார் கொண்டு வருவதற்கு தயாராக இருக்கிறார். பேச்சுவார்த்தைக்கு ஜே.வி.பி. முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கிறது. எதற்கும் மக்கள் தயாராக இருக்க வேண்டும்" இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

திருகோணமலையில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வெலிக்கடை தியாகிகள் தின நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழர் தாயகமான திருகோணமலையை இழக்க தமிழ்ச் சமூகம் ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டாது.

நாம் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர்களாக மாத்திரம் இருக்க முடியாது. பிரதேசவாதம் பேசிய கட்சிகள் எதுவும் வென்றதாக சரித்திரம் கிடையாது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு படைஇன்று பாராளுமன்றத்தில் இருக்கின்றது. 22 பாராளுமன்ற உறுப்பினர்களின் சக்தி மக்கள் சக்தியாக இருக்கின்றது.

பேச்சுவார்த்தைக்கு ஜே.வி.பி. முட்டுக்கட்டை போட்டுக்கொண்டிருக்கின்றது. எதற்கும் மக்கள் தயாராக இருக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திர மக்கள் முன்னணியும் ஒரேகுட்டையில் ஊறிய மட்டைகளே அவர்கள் தமிழ் மக்களுக்குத்தீர்வைக் கொடுக்க முன் வருவதில்லை. பேச்சுவார்த்தை எனச் சொல்லிய காலகட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அமெரிக்காவில் யுத்தக் கப்பல்களை வாங்கியது.

போர் திணிப்பு வாய்ப்பை அம்மையார் கொண்டுவருவதற்கு தயாராக இருக்கின்றார். மண்ணை மீட்டெடுக்க தமிழ்மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கோட்டமட்ட சமூகக்கல்விப் போட்டிகள்

(வவுனியாசெய்தியாளர்)

வவுனியாக் கோட்டம், செட்டிகுளக்கோட்டம் ஆகிய பாடசாலைகளுக்கிடையேயான சமூகக் கல்விப்போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

வவுனியாக்கோட்டப் பாடசாலைகளுக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலும், செட்டிகுளப்பாடசாலைகளுக்கு அல்ஹாமியா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. (10)



வவுனியாவில் நடைபெற்ற உள்ளூராட்சி வார நிகழ்வில் முன்பள்ளி மாணவிகளின் மலே நடனத்தை படத்தில் காணலாம்.
படப்பிடிப்பு:- ஆறு சுபாஸ்கரன் (வவுனியா செய்தியாளர்.)

# சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் 2-ஆம் க்ட்ட சமூக நலப்பயிற்சிநெறி

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சுகாதாரத் திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி.நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடாத்தப்படும் சமூக நலப்பயிற்சி நெறியின் 2ஆம் கட்டம் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு நடாத்தும் அடிப்படையில் கடந்த 24,25 ஆகிய இருநாட்கள் கிளிநொச்சி மாவட்டம் பளைப் பிரதேசத்தில், இயக்கச்சி அ.த.க.பாடசாலை, பளை றோ.க.த.க.பாடசாலை, வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை ஆகியவற்றில் சிறப்பாக நடாத்தப் பெற்றது.

இப்பயிற்சி நெறியில் ஒவ்வொருபாடசாலைகளிலும் 50இற்கு மேற்பட்ட மாணவர்களும், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்களும் கலந்துகொண்டனர். மேலும் இப்பயிற்சி நெறியில் முதலுதவி, உடல்அமைப்பு தொழிற்பாடும், முதலுதவிச் செய்முறைகள், தொற்று நோய்கள், சுகாதார நடைமுறைகள் தொடர்பாகப் பல விரிவுரைகள் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர், திட்ட இணைப்பாளர், தலைவர், தொண்டர்கள் ஆகியோராலும் சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டன.

இப்பயிற்சி நெறியில் முதலுதவி தொடர்பான கைந்நூல் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் தயாரிக்கப்பட்டு பயிற்சியில் பங்குபற்றிய ஒவ்வொரு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. மேலும் பயிற்சியை நிறைவுசெய்த ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவிப் பெட்டிகளும் அதற்கான மருந்துகளும், உபகரணங்களும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் இத்திட்டத்தில் வழங்கப்பட்டதோடு, ஒவ்வொரு பாடசாலையிலும் பயிற்சி நெறியை நிறைவுசெய்த மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் முதலுதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டதோடு, பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ், சின்னங்கள் வழங்கும் ஒழுங்கும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டம் பாடசாலை ஆசிரியர்களுக்கு 2004 ஆனி மாதத்தில் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சமாதானத்திற்காக புலிகள் பொறுமை காக்கின்றனர்

# ஆட்சியாளரோ தமிழ்த் தேசியத்தை உடைக்க முயல்கின்றனர்

-யாழ். மாவட்டதுணை அரசியல்துறைப் பொறுப்பாளர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**"கடந்த இரண்டரை ஆண்டுகளாக விடுதலைப்புலிகளாகிய நாங்கள் சமாதானத்திற்காகப் பொறுமை காத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் சிங்கள ஆட்சியாளர்களோ தமிழ்த் தேசியத்தை உடைப்பதற்காக முயன்றுகொண்டிருக்கிறார்கள். எனினும் கடந்த காலங்களில் இவ்வாறான தடைகள் எல்லாவற்றிற்கும் முகங்கொடுத்து அவற்றை உடைத்தெறிந்ததுதான் எமது வரலாறு" எனத் தெரிவித்தார் விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட துணைஅரசியல் துறைப் பொறுப்பாளர் கி.செம்மணன்.**

காரைநகரில் இடம்பெற்ற பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் கூட்டத்தில் கலந்து சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். காரைநகர் சுப்பிரமணிய வித்தியாலயக் கட்டடத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்திற்கு தேசிய எழுச்சிப் பேரவையின் காரைநகர் பிரதேசத்திற்கான செயலாளர் வே.சிற்சபேசன் தலைமை தாங்கினார்.

அங்கு செம்மணன் மேலும் உரையாற்றுகையில், மாவீரர்களது தியாகத்தினால் கொண்டு வரப்பட்ட சமாதானம் நிலைக்க வேண்டுமானால் இராணுவப் பலத்துடன் அரசியல் பலமும் எமக்குத் தேவை.இதற்குத் தமிழ் மக்கள் அனைவரினதும் அர்ப்பணிப்பு முக்கியமானது.

தாயகத்தின் விடுதலை முழுமைபெறும் போதுதான் தாயகத்தின் அபிவிருத்தி சாத்தியமாகும். எமது மண் போதிய வளமானது. அதனால் அனைத்துத துறைகளிலும் நாட்டைக்கட்டியெழுப்பமுடியும். அதற்காக அனைவரும் விடுதலைக்காக முதலில் உழைக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

முன்னதாக நேற்றுப் பிற்பகல் 3.00மணிக்கு இடம்பெற்ற இக் கூட்டத்தில் பொதுச்சுடரை யாழ். மாவட்ட துணை அரசியல் துறைப பொறுப்பாளர் கி.செம்மணன், காரைநகர் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் செ.கானகன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

1983 யூலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களை நினைவுகூர்ந்து நினைவுரையினை யாழ். மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் ஆற்றினார்.

இதனிடையே காரைநகர்ப் பகுதியில் பரவிவந்த நெருப்புக் காய்ச்சல் நோயினைக் கட்டுப்படுத்த தேசிய எழுச்சிப் பேரவையினரது பங்களிப்புத் தொடர்பாக பலதரப்பாலும் பாராட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (27)

## ரோந்து அதிகரிப்பு

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் பொலிஸார் தமது இரவு நேர ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர். குற்றச் செயல்களைக கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை என்ற பெயரில் பொலிசாரின் விசேடஅணியினரால் மேற்கொள்ளப்படும் இந் நடவடிக்கையால் இரவு நேரங்களில் பொது மக்கள் வீதியில் நடமாடப் பெரிதும் அஞ்சுகின்றனர். (33)

## மிதிவெடி அபாயக்கல்வியை பாடத்திட்டத்தில் சேர்க்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி அபாயக்கல்வியைப் பாடசாலை மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் ஒன்றாகப் புகட்டுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மிதிவெடிகள் அல்லது வெடிபொருட்களின் விபத்துச் சம்பவங்களுக்கு இலக்காகி பாதிக்கப்படுவோரில் பாடசாலை மாணவர்களே கணிசமான அளவில் காணப்படுகின்றார்கள். இதனால் படையினரால் கைவிடப்பட்ட வெடிபொருட்கள் மற்றும் பொறிவெடிகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக மிதிவெடி அபாயக்கல்வியை மேலதிகமான ஒருபாடமாக பாடத்திட்டத்துடன் இணைத்துப் புகட்டப்படவுள்ளது. இது தற்போது யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் சகல பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (33)

## வலி-வடக்கில் மீளக்குடியேறும் மக்களுக்குப் படையினர் அச்சுறுத்தல்

- மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் படையினரால் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மீளக்குடியமரச் சென்றுள்ள மக்கள் மீது படையினர் பல்வேறு கருத்துக்களையும், அச்சுறுத்தல்களையும் விடுத்து வருகின்றனர்.

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை, கட்டுவன், வளலாய், பண்ணாகம் போன்ற பகுதிகளில் உள்ள இராணுவப்பாதுகாப்பு வலயங்களின் முன்னரங்குகளில் இருந்து 600மீற்றர் தூரத்திற்கு அப்பால் மக்கள் மீளக்குடியமரலாம் எனப் படையினர் அண்மையில் அனுமதி வழங்கியிருந்தனர்.

படையினரால் அனுமதியளிக்கப்பட்ட சில பகுதிகளில் மக்கள் தற்பொழுது மீளக்குடியேற ஆரம்பித்துள்ளனர். எனினும் இங்கு குடியமரச் செல்வோர் இதே நேரங்களில் அங்குள்ள அவர்களது உறைவிடங்களில் தங்கக் கூடாது எனவும் விருந்தினர்களை வீடுகளில் தங்கவைக்கக்கூடாது எனவும் மேற்படி பகுதிகளில் மீளக்குடியமர வருவோர் அவர்களது விபரங்களைப் படையினரிடம் ஒப்படைத்து அனுமதி வழங்கப்பட்ட பின்னரே குடியமரலாம் எனவும் பல்வேறுபட்ட கெடுபிடிகளையும் அச்சுறுத்தல்களையும் படையினர் விடுத்துவருகின்றனர்.

படையினரால் விடுக்கப்படும் அச்சுறுத்தல்களால் பாதிக்கப்பட்டவர்கள். மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடமும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும் பலமுறைப்பாடுகளைச செய்துவருகின்றனர். (33)

## யாழ்–தீவகம் பண்ணை வீதியிலுள்ள காவலரண், முட்கம்பிகளை அகற்றுக

- பொது அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து தீவகம் செலலும் வீதியிலுள்ள பண்ணைப்பாலத்தினோரமாக மக்களின் இயல்பான போக்குவரத்திற்கு இடையூறுதரும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ள கடற்படையினரது காவலரண்கள் முட்கம்பிச்சுருள்கள்என்பன அகற்றப்படல் வேண்டுமென யாழ். மாவட்ட பொது அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பண்ணைப்பாலமூடாக தீவகம் செல்லும் வீதியில் அமைக்கப்பட்டுள்ள படையினரது காவல் அரண்கள், முட்கம்பி வேலிகள் என்பன போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ளதால் அப்பகுதியில் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்திச்செல்ல முடியாது நெரிசல்களும், விபத்துக்களும் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றன. இதனாலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

## யாழ்.சுப்பிரமணியம் பூங்கா புனரமைப்புப்பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள சுப்பிரமணியம் பூங்காவைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவரான உலகப்புகழ்பெற்ற வைத்திய நிபுணரான சுப்பிரமணியம் நினைவாக யாழ்.பொதுநூலகம் முன்பாக அமைக்கப்பட்டிருந்த மேற்படி பூங்கா கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் சிதைத்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

பின்னர் அதனைப் புனரமைத்து வளப்படுத்த யாழ். மாநகரசபை மற்றும் சர்வதேச நிறுவனங்கள் முன்வந்தன. ஆனால் யாழ்.கோட்டையையும் அதனை அண்டிய பகுதிகளிலும் நிலைகொண்டுள்ள படையினரின் பாதுகாப்பினைக் காரணங்காட்டி அதனை புனரமைக்கப்படையினர் தடைவிதித்தனர். இதனால் கைவிடப்பட்ட இப்பூங்காவின் புனரமைப்புப் பணிகள் தற்போது யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு முதற்கட்டமாக 18இலட்சத்து 60 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (33)

## கண்ணாடி இழைப்படகுகளைத் தயாரிக்க காரை நகர் மீனவருக்கு "போரூட்" பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகத்தில் உள்ள காரைநகர் பிரதேச மீனவர்களின் நன்மைகருதி "போரூட்" நிறுவனத்தால் கண்ணாடி இழைப்படகுகளை தயாரிப்பது மற்றும் திருத்துவது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

காரைநகர் கடற்றொழிலாளர்கள் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக நடத்தப்பட்டு வரும் இப் பயிற்சியில் மீனவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் உள்வாங்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள காரைநகர் பிரதேச மீனவர்களின் தொழில் மேம்பாடு மற்றும் அபிவிருத்தி போன்றவற்றைக் கவனத்திற் கொண்டே இவ்வாறான தொழிற் பயிற்சிகளை "போரூட்" நிறுவனம் வழங்கி வருகிறது. (33)

## தீவுப்பகுதிப் பாடசாலைகளுக்கு மாணவர் செல்லும் வீதம் குறைவடைகிறது

- வலயக் கல்விப் பணிமனை தகவல்

யாழ்.தீவகப் பிரதேச மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லும் வீதம் குறைவடைந்து வருவதாக தீவக வலயக்கல்விப் பணிமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலத்தில் யாழ். குடாஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் தீவகப் பிரதேசம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனாலும் தீவகப் பிரதேசங்களில் படையினரின் பல்வேறு கெடுபிடிகளினாலும் இப்பகுதி மக்களின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பாடசாலை செல்லும் மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்திவிட்டு தொழில் வாய்ப்புக்களை தேடத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையானது கற்கும் வயதுடையோர் பாடசாலை செல்வதை மட்டுப்படுத்தியுள்ளமை தீவகப் பகுதி கல்வி மேம்பாட்டை வெகுவாகப் பாதித்துள்ளது. இவ்வாறான மாணவ சமூகத்தினரது நிலைகளை மேம்படுத்த இங்கு எவ்வித உதவித் திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை எனவும் மேலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (33)

-நாகர் கோவில் கடற்பரப்பில்-

## கடற்றொழிலாளர்கள் மீது படையினர் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி நாகர் கோவில் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; வழமை போல கடற்றொழிலில் ஈடுபட்டு விட்டு காலைவேளை கரைதிரும்பிக் கொண்டிருந்த மீனவர் குழு மீது டோராப்படகு ஒன்றில் வந்த கடற்படையினர் திடீர் துப்பாக்கிப்பிரயோகத்தை நடத்தினர்.

இதனால் பீதியடைந்த மீனவர்கள் படகைவிட்டு நீரில் குதித்தனர் அவ்வேளை அவர்களை நோக்கி டோராப்படகில் வந்த கடற்படையினர் அவர்களை துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய பின் விடுவித்திருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

கடற்படையினரது இத்துப் பாக்கிப் பிரயோகத்தால் மீனவர்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளதுடன தொழிலுக்குச் செல்ல மீனவாகள் அச்சம் தெரிவிக்கின்றனர். (33,27)

## யாழ். மாவட்ட தே. எ பேரவையின் மாநாடு வரும் சனிக்கிழமை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட மாநாடு எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறையில் இடம்பெறவுள்ளது. பேரவையின் செயலாளர் சூ. சிறில் தலைமையில் பருத்தித்துறை இந்துமகளிர் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெறும் எனவும் அனைத்துப் பிரதேச கோட்ட மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், ஆலோசகர்கள் அனை வரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (27)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



# "ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்"

## பகுதி-06

என் அன்பு வாசகர்களே...!

சென்ற புதன் உங்களைச் சந்திக்காமல போய் விட்டேன். மன்னித்திருப்பீர்கள்

* * * *

இன்று ஒரு 'டேனிஷ் முன்பள்ளியுடன் சந்திக்கிறேன். இந்த 'முன்பள்ளி' டென்மார்க் நாட்டில் மிகவும் புகழ்வாய்ந்தது.

சில பெற்றோர்கள் தமது பிள்ளைகள் வயிற்றில் இருக்கும் பொழுதே... தமது பிள்ளை இங்குதான் கற்கவேண்டும் என முடிவெடுத்து 4வருடங்கள் முன்னராகவே வந்து பதிவுசெய்துவிட்டுப் போவார்கள்.

இந்த மழலைகளுடன் நான் 2ஆண்டுகள் கழித்தேன்.

ஏறக்குறைய ஒரு குடும்பமாகவே வாழ்ந்தோம். இங்கே 30 பிள்ளைகளுக்கு மட்டுந்தான் இடமுண்டு. 30இற்கு மேல் பதிவுசெய்த ஒழுங்கின்படி பிள்ளைகளைச் சேர்ப்பார்கள்.

31ஆவது பிள்ளை அந்த நாட்டின் பிரதமரின் பிள்ளையாக இருந்தால் கூட அங்கே இடமில்லை. இந்த விஷயம் எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. எல்லோரையும் எல்லாருக்கும் தெரியும்.

எல்லாப் பிள்ளைகளின் பெற்றோர்கள்... அவர்களது குடும்பப் பின்னணி... அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள், அவர்களது பின்னணி... எல்லாமுமே எல்லாருக்கும் தெரியும்.

இந்த 'முன்பள்ளி' அரசாங்கப் பணத்துடனும் சில தனியார் முதலீட்டுடனும் இயங்குகிறது.

"மனசால் பாதிக்கப்பட்ட" மழலைகளும் இங்கே இருக்கிறார்கள்.

இரண்டு அல்லது மூன்று முறை விவாகரத்துச் செய்யப்பட்ட பெற்றோர்களின் பிள்ளைகள் தான் இங்கு அதிகம்.

பிள்ளைகள் இயற்கைச் சூழலுடன் வளர வேண்டும் என்பதற்காக... 3ஏக்கர் காணியை வாங்கி... பெரிய மரங்களை நாட்டி... பல வகைப் பிராணிகளையும் வளர்த்து...சுற்றவர உயர்ந்த வேலியை அடைத்து... இந்த 30 மழலைகளையும் பராமரிக்கிறார்கள்.

இங்கே இருக்கும் பெரியவர்கள் என்னுடன் சேர்த்து 6பேர்.

இவர்கள் 'உளவியல்' 'மனநலம்' 'உளவளத்துணை' போன்ற கற்கைநெறிகளைக் கற்றவர்கள்.

30 பிள்ளைகளுக்கு 3ஏக்கர் காணியும் 6 ஆசிரியர்களும் நினைத்தே பார்க்கமுடியாது எங்கள் நாட்டில் அதுவும் நிபுணத்துவ ஆசிரியர்கள்.

சரி..

சிலஅனுபவங்களை உங்களுடன் இந்தப் பள்ளி தொடர்பாகப் பகிர்கிறேன்.



இந்தப்புகைப்படத்தில் எனக்குக்கீழே இருக்கும் மழலையின் பெயர் 'Benjmin' (தமிழில் 'பெஞ்சமின்' என்று அழைப்போம்.)

அவன் துருதுருத்தவன்.

ஒரு 2செக்கன்கூட அவனால் சும்மா இருக்க முடியாது.

எறிவான்,

துப்புவான்,

கிள்ளுவான்,

சும்மா சிரிப்பான்,

திடீரென்று முன்னாலிருக்கும் பெட்டையின் முகத்தில் பலமாகக் குத்துவான்.

அந்தப் பெட்டைக்கு மூக்கு உடைந்து இரத் தம் வரும்.

அது வீரிட்டுக்கத்தும் நாங்கள் உடனே அதை 'ஆஸ்பத்திரிக்கு' இட்டுச்செல்வோம். ஆஸ்பத்திரியில் 'டொக்டர்' பெயரைக் கேட்பார். அவளது பெற்றோரைப் பற்றிக்கேட்பார்.

உடனே பெற்றோருக்கு அவர் 'Phone' பண்ணுவார்.

அவரின் தகப்பன் 150 கிலோ மீற்றருக்கு அப்பால் ஒரு நிறுவனத்தின் முதலாளியாய் இருப்பார்.

அவர் தன்ரை "Audi 100" (விலையுயர்ந்த கார்) ஐ எடுத்துக் கொண்டு பாய்ஞ்சு வருவார் ஆஸ் பத்திரியையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டு "என்ரை செல்ல மகளுக்கு யார் அடிச்சது?" என்பார்.

நான் பொய்யும் சொல்லாமல் உண்மையும் சொல்லாமல்... சமாளிப்பேன்.

எல்லாம் இந்த 'பெஞ்சமின் செய்யிற கூத்து 2 செக்கனுக்கு அக்கம் பக்கம் பார்க்கவிடமாட்டான்.

ஒரு நாள் என்ன நடந்தது தெரியுமா? 30மழலைகளையும் கூட்டிக் கொண்டு நானும் ஒரு ஆசிரியையும் ஒரு உலாப் போனோம், 50 கி.மீ.தள்ளி ஒரு காடு இருக்கிறது. அங்கு பாடசாலைக்குரிய 'வான்' ஒன்றில் ஏற்றி அவர்களை அழைத்துச் சென்றோம்.

காட்டினுள் கொடிய மிருகங்கள் எதுவும் இல்லை. ஆனால் அந்தக் காட்டில் பல புதை குழிகள் இருந்தன. ஒரு இடத்தைத் தெரிவு செய்து அதனைச் சுற்றி சில கொடிக் கம்பங்களை நாட்டி "நீங்கள் இங்கே மட்டும் தான் விளையாட வேண்டும். கொடிகளுக்கு அப்பால் போகக்கூடாது" எனக்கட்டளையிட்டு விட்டு அவர்களுக்கான உணவுகளைத் தயாரிக்கும் வேலையில் நானும் அந்த ஆசிரியையும் ஈடுபட்டோம்.

மழலைகளும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். சாப்பாடு தயார் செய்து விட்டு "எல்லோரும் சாப்பிட வாங்கோ..." என்று கூவினேன்.

குருவிக் கூட்டுக்கு ஓடிவரும் சிட்டுக் குருவிகள்போல அந்த மழலைகள் ஓடி வந்தனர். வந்து எல்லோரும் வட்டமாக அமர்ந்தார்கள். மற்ற ஆசிரியை உணவைப் பரிமாற ஆரம்பித்தாள். நான் மழலைகளை எண்ண ஆரம்பித்தேன்.

01,02,03,.....24....25...26...27...28...29...

எங்கே 30???

நெஞ்சு தடுமாறியது.

மீண்டும் எண்ணினேன் 29 தான்.

மீண்டும் எண்ணி 29 தான் என முடிவாயிற்று .

ஆசிரியையும் எண்ணினாள் 29 தான்.

யாரைக்காணவில்லை?

ஆம் 'பெஞ்சமின்தான்'

பயம் கவ்வியது

"பெஞ்சமின்" "பெஞ்சமின்"

கூவினோம் கதறினேன்

பலனில்லை

காடு சற்றுப் பெரியகாடு அத்துடன் அரசாங்க உத்தரவு எடுக்காமல் தான் அங்கு வந்திருந்தோம்.

ஆசிரியையுடன் ஏனைய மழலைகளை விட்டுவிட்டு ... காடெங்கும் ஓடினேன்.

கூவிக் கூவி அழைத்தேன்.

புதர்கள் பெரிதாகத் தோன்றின.

புதைகுழிகள் பயங்கரமாகத் தெரிந்தன.

"பெஞ்சமின் ஒரே ஒரு குரல் கொடுக்க மாட்டாயா...? pleasse"

நெஞ்சு படபடவென அடித்தது

நேரம் சென்று கொண்டிருந்தது

எங்கே அவன்?

கற்பனைகள் கொடுமையானவை... !

அந்த மழலை எங்கே ....?

(அடுத்த வாரம் பார்க்கலாம்)

---

# யாழ்.மருத்துவபீடத்துடன் இணைந்து கிளி.யில் மாபெரும் சுகாதாரக் கண்காட்சி

## கிளி. மருத்துவசங்கம் தீர்மானம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சியில் எதிர்வரும் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் மாபெரும் சுகாதாரக்கண்காட்சியினை நடத்த கிளிநொச்சி மருத்துவச்சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

வைத்திய கலாநிதி பிறைற்ரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பெற்றது.

அதாவது கிளி.மாவட்டப் பாடசாலைகளில் மாணவர்களின் சுகாதார நிலவரங்களை அறிதல் மற்றும் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் மாவட்டம் தழுவிய ரீதியில்மாபெரும்சுகாதாரக் கண்காட்சியினை யாழ்.மருத்துவ பீடத்தினருடன் இணைந்து நடாத்துதல் என்பனவாகும்.

மேற்படி கூட்டத்தில் பத்துமருத்துவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

---

# கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரர் ஆசிரிய நியமன நேர்முகப் பரீட்சை

(வவுனியாசெய்தியாளர்)

கற்பித்தலில் தேசிய டிப்ளோ மா பாடநெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறவுள்ளது. இலங்கையிலுள்ள சகல தேசிய கல்வியியற் கல்லூரிகளிலும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியைப் பின்பற்றி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பூர்த்தி செய்தவர்களுக்கே ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 3ஆம் திகதி இசுறுபாயவிலுள்ள கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

---

# புலிகள்-முஸ்லிம் பிரதிநிதிகள் கிண்ணியாவில் சந்தித்துப்பேச்சு

(திருமலை)

திருகோணமலை கிண்ணியாவில் விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையே நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா பிரதேச செயலர் பணிமனையில் பிற்பகல் 2.00 மணிக்கு இச்சந்திப்பு இடம்பெற்றது. இதில் குரங்கு பாய்ஞ்சான் பகுதியில் வயற் செய்கை குறித்தும் காடுகளில் தொழில் செய்வது குறித்தும் வேறும் சில விடயங்களும் ஆராயப்பட்டன.

இதில் காடுகளில் பச்சை மரங்களைத் தவிர்த்து விறகுவெட்ட இணக்கம் காணப்பட்டது. தொடர்ந்தும் கிரமமான முறையில் சந்திப்புக்களை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டதுடன் இதற்கென குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (தி)

---

# வேலைத்திட்டங்களை துரிதப்படுத்த பணிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

உலக உணவுத்திட்ட வேலைத் திட்டங்களைத் துரிதப்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் மற்றும் சகல உதவி அரசாங்க அதிபர்கள் அனைவருக்கும் இது தொடர்பான பணிப்புரைகளை அவர் விடுத்துள்ளார். (சோ,கு)

---

# சிறுவர் உரிமைகள் தொடர்பாக கிளிநொச்சியில் பயிற்சிப்பட்டறை



கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர் உரிமைகள் தொடர்பான பயிற்சி ஒன்றினை கிளிநொச்சி பிரதேச இணைப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் எதிர்கால சிறார்களின் நலனைக்கருத்திற்கொண்டு செயற்படுத்தப்பட்டது.

அவற்றில் 10ஆம்,11ஆம் திகதிகளில் அ.சா.நிறுவனங்களின் பணியாளர்கள், 25பேருக்கு அ.சா.நிறுவன இணையத்திலும் 15,16ஆம் திகதிகளில் கருணா நிலையம், ஆரோபணம், செஞ்சோலை போன்ற சிறுவர் இல்லங்களில் உத்தியோகத்தர் களுக்கும், மாதர்சங்கக் குழு உறுப்பினர்கள் 40 பேருக் கும், அ.சா.நி. இணைய மண்டபத்திலும் 22, 23ஆம்திகதிகளில் யூனியன் குளம், கோணாவில், அக்கராயன் கிராமம், மாதர்சங்க கிராமம் அபிவிருத்தி சங்ககுழு உறுப்பினர்கள் 25பேருக்கு கோணாவில் பொதுமண்ட பத்திலும் பயிற்சிகள் வழங்கப் பட்டன.

பயிற்சியினை கல்வித்திணைக்களத்தின் ஆசிரிய ஆலோசகர்களான திருமதி.மதுரநாயகம் மற்றும் மோகனபாலன் த.பு.கழக சிறுவர் நலன்திட்ட உத்தியோகத்தர் மோகன்ராஜ் ஆகியோர் சிறுவர்களின் நலன், அவர்களின் உரிமைகள், சிறார்கள் தொடர்பாகப் பெற்றோர் சமூகம், ஆசிரியர்களின் பங்களிப்பு, சிறுவர்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பிரச்சினைக்கான தீர்வுகள் போன்ற கருத்துக்களை உள்வாங்கி பயிற்சியினை வழங்கியதுடன் பயிற்சியின் நிறைவில் சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி சிறு நாடக நிகழ்வும் பயிற்சியாளர்கள் செய்தனர்.

பயிற்சியில் யுனிசெப் பிரதிநிதி கலந்துகொண்டு பயிற்சி வழங்கியதுடன, கோணாவில் கிராம அலுவலா கலந்துகொண்டு சிறுவர் உரிமைகளும் பயிற்சியின் முக்கியத்துவமும் எனும் விடயத்தினைப் பகிர்ந்து கொண்டதுடன் பிரதேச இணைப்பாளர் பயிற்சி தொடர்பான கருத்துக்களை பயிற்சியாளரிடம் கேட்டு அறிந்ததுடன் நன்றியுரையுடன் பயிற்சிகள் நிறைவுபெற்றன.

**19.** திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் கண்காணிப்புக் குழுவினரை புலிகள் சந்தித்து இரு தினங்களுக்கு முன் மூதூரில் இருஇளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், தற்போதைய சமாதான சூழ்நிலை குறித்து ஆராய்ந்தனர்.

* சனாதிபதி மாளிகையில் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சரையும் அவரது குழுவினரையும் சந்தித்த சனாதிபதி சமாதானப்பேச்சுக்கள் தொடர்பாக புலிகளின் பதிலை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

* தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பீற்றர் கரோல் தலைமையிலான உலக வங்கி குழுவினரைச் சந்தித்து சமாதானத்திற்கான வாய்ப்பை அரசு சீர்குலைத்து யுத்தத்திற்கு செல்வது வேதனைக்குரியது எனத் தெரிவித்தனர்.



உலகவங்கி பிரதிநிதிகளுடன்..

* வடக்கு கிழக்கு மனித உரிமை செயலகத்தின் தலைவர் கனகரத்தினம் அடிகளாரை இலங்கைக்கான யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி, வன்னிக்கான வதிவிடப் பிரதிநிதி ஆகியோர் சந்தித்து செயலகத்தின் பூரண செயற்பாடுகளைக் கேட்டறிந்தனர்.

* கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த மட்டு, அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல் யன், தளபதி பிரபா ஆகியோர் உலங்கு வானூர்தி மூலம் மட்டக்களப்புக்கு புறப்பட்டுச்சென்றனர்.

* கிழக்குப் பாதுகாப்பு நிலவரம் குறித்து அரச சமாதானச்செயலக பணிப்பாளர் ஜயந்த தனபால, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ஹேரத், முப்படைத்தளபதிகள், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் ஆராய்ந்தனர்.

**20.** சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனைச் சந்தித்து தற்போதைய சமாதானநிலை குறித்து கலந்துரையாடி னர்.

* இலங்கையிலுள்ள ஐ.நா சபைக்கிளையின் மனிதஉரிமைகளுக்கான ஆலோசகர் மாத்ரோன் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களைச் சந்தித்து சர்வதேசத்தினதும் தமிழினத்தினதும் தமிழீழத்தினதும் மனித உரிமைகள் தொடர்பாக கலந்துரையாடினர்

* கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் ஜப்பானிய அரச நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட அதிதீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடத்தை ஜப்பானிய தூதரக பொருளாதாரப்பிரிவு முதன்மைச் செயலாளர் டாக்டர் யகிமியாகாரா அவர்கள் திறந்து வைத்தார்.



தீவிர சிகிச்சைப்பிரிவு திறப்பு..

* புதிய பாராளுமன்ற உறுப்பினர்களாக ஐ.ம.சு முன்னணி மொகமட் முன்மிக், நிர்மல் கொத்தலாவல, எச்.ஆர் விக்கிரமபால, ஐ.தே.மு உறுப்பினர்களாக மு.கா.வைச் சேர்ந்த பசீர் சேகுதாவுத், முகைதீன் முஸ்தபா, தே.பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். நிகாமுதீன் ஆகியோர் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

**22** போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்த அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகளுக்கு அமைய மட்டக்களப்பில் இருந்து ஆயுதக்குழுக்களை வெளி யேற்ற அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத்தெரிவித்தனர்.



போர்நிறுத்தக் கண்காணிப்பாளருடன்..

*. இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் டேவிட்பின்ஸ் யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்து பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்தார்.

*. துறை முகங்கள் மற்றும் கப்பல்களைத் தீவிரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கும் ஒப்பந்தத்தில் அமெரிக்காவின் எரிசக்தி அமைச்சின் செயலாளர் ஸ்பென்சர் ஏபிரகாமும் இலங்கையின் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் மங்களசமரவீரவும் கைச்சாத்திட்டனர்.

**23.** கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் முன் ஈ.பி.டி.பி.யினர் பிரேதப் பெட்டியுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

*. திருகோணமலை கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் படையினர் புலிகள் சந்தித்து புரிந்துணர்வுடன் செயற்பட இணக்கம் தெரிவித்தனர்.

* புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் வைத்தியசாலையில் நவீன வசதிகளைக் கொண்ட புதிய கட்டடம் அரசியல் துறைப் பொறுப்பாளரினால் திறந்து வைக்கப்பட்டது.



திறப்பு விழாவில்..

*.மாவீரர் லெப்ரினன்ட் செல்லக்கிளி அம்மானின் 21 ஆவது ஆண்டு நினைவு தினநிகழ்வுகள் அவர் வீரச்சாவடைந்த திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில் அவர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் நடைபெற்றன.



நினைவுத் தூபி




**24.** வவுனியா மாவட்ட விடியல் இசைக் குழுவினரின் தாய்மடியில் தாலாட்டுபாடல் இறுவெட்டு வவுனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.



கலைஞர் கௌரவிப்பு..

*. மணிமேகலை பிரசுரத்தின் நூல் கண்காட்சி கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.



நூல் கண்காட்சி

*.தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு வந்த பேராசிரியரும், ஊடகவியலாளருமான வீ.அரசு அவர்கள் கிளிநொச்சிக்கு வருகைதந்து வன்னிப் பகுதியில் உள்ள எழுத்தாளர்கள், நாடகக்கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், ஆர்வலர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.



கலந்துரையாடலில்..

**25**. கருணா தரப்பினரிடையே பிளவு ஏழுபேர் சகாக்களால் படுகொலை சுட்டுக் கொன்றோர் புலிகளிடம் சரண்.



படுகொலையானோர்..

*. கறுப்பு ஜுலை தினம் தமிழர்தாயகம் எங்கும் துக்கதினமாக கடைப்பிடிக்கப் பட்டது.



கறுப்பு யூலை நினைவாக

*. மணக்கிண்டி மலையில் அமைந்திருந்த சிறிலங்காப் படைமுகாம் மீதான இதயபூமி வெற்றித் தாக்குதலின் 11 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு அளம்பிலில் வெகு சிறப்பாக நடைபெற்றது.



வெற்றிநாள் நினைவில்..

## கவனத்திற் கொள்க!

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி சந்தையடியில்இருந்து இராமநாதபுரத்திற்கு செல்லும் வீதி ( பழைய கண்டிவீதி) வெகுவாக சேதமடைந்துள்ளது. கற்கள் வெளியரும்பிய நிலையில் 300 மீற்றர் நீளமான வீதி மிக நீண்டகாலமாகத் திருத்தப்படாது உள்ளது. இவ் வீதியால் பயணிக்கும் மக்கள் மிகுந்த சிரமத்தினை எதிர் கொள்வதுடன் பொதிகளுடன் செல்லும் வியாபாரிகளும் பலத்த சிரமப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ் வீதியில் தடுப்பு சுவர் அற்ற பாலம் ஒன்றும் காணப்படுகின்றது இப்பாலத்தினால் விபத்தும் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்தில் எடுக்குமாறு மக்கள்வேண்டுகோள் விடுத்துள்ளனர். (15)

## வலிப்பு தொடர்பான நோய்களுக்கு நோர்வே நரம்பியல் நிபுணர் சிகிச்சை

(அலுவலகச் செய்தியாளர்)

நோர்வே நாட்டு நரம்பியல் நிபுணர் டாக்டர் ஜோசெப் அவர்களினால் கிளி. மாவட்ட வைத்திய சாலையில் வலிப்பு சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. நேற்று கிளி.மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்பமான மேற்படி சிகிச்சை இன்றும் இடம் பெறவுள்ளது.நேற்றையதினம் மட்டும் கிளி.முல்லை மாவட்டங்களைச் சேர்ந்த 47 வலிப்பு சம்பந்தமான நோயாளர்கள் சிகிச்சைபெற்றுச் சென்றுள்ளனர்.



மேற்படி சிகிச்சை கிளிமாவட்ட ஊனமுற்றோர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## மருதோடை கிராமத்தில் யானைகள் அட்டகாசம்

(முள்ளியவளை)

நெடுங்கேணி மருதோடைக் கிராமத்தில் காட்டுயானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்த நிலையில் உள்ளனர். சிறிலங்கா இராணுவத்தினர் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை மூலம் அப்பகுதியை ஆக்கிரமித்த போது, மக்கள் இடம் பெயர்ந்து தற் போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் மீளக் குடியமர்ந்து தமது இயல்பு வாழ்வை ஆரம்பித்த போதும் அப்பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசத்தினால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். கடந்த வாரம் அப்பகுதியில், வயல் வேலைக்குச் சென்ற அதே இடத்தைசேர்ந்த சே.கனகசுந்தரம் என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தை யானையால் தாக்கப்பட்டு படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)


உப்பு உற்பத்தி பேட்டையின்
திறப்புவிழாவின் போது
உப்பு உற்பத்திப் பேட்டை
SALT PRODUCTION COMPLEX
சுகவாழ்வை நோக்கிய பாதையில்
உப்பு உற்பத்திப் பேட்டையின்
தொடக்கவிழாவில் ஒரு அத்தியாயம்!

(சி-10041)


உப்பு உற்பத்திப் பேட்டை
தமிழர் தாயகத்தின் முதற்தரம் வாய்ந்த
உப்பு என்றாலே அது ஆனையிறவின்
உப்பு உற்பத்தி நிறுவனத்தால்
தயாரிக்கப்பட்ட அயடீன் கலந்த உப்புதான்
unicef
உப்பு உற்பத்திப் பேட்டை
A9 வீதி,
ஆனையிறவு.
A9 ROAD,
ELEPHANT PASS.
(சி-10041)

## போனஸ் புள்ளி தேவையற்றது பாக்.பயிற்சியாளர் வூல்மர்

ஒருநாள் போட்டிகளில் 'போனஸ்' புள்ளி வழங்கும் முறைக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பாப்வூல்மர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இலங்கையில் நடைபெற்று வரும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியாவுக்கு போனஸ் புள்ளி வழங்கப்பட்டது.இது போட்டியில் வென்றும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவது குறித்த நிச்சயமற்ற நிலையில் பாகிஸ்தான் உள்ளது எனவும் வூல்மர் தெரிவித்துள்ளார்.



ஆசியக் கோப்பைக்கான இந்திய சிறிலங்கா அணி களுக்கிடையிலான பரபரப்பான இறுதி சுப்பர் லீக் போட்டியில் இந்திய அணி 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இவ்வெற்றி மூலம் இந்திய அணி இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றுள்ளது.

ஆசியக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி – 2004

# பரபரப்பான நேற்றைய ஆட்டத்தில்

# இந்திய அணி இறுதிப் போட்டிக்கு தகுதி!

ஏற்கனவே, இறுதிப் போட் டிக்குத் தகுதிபெற்றுள்ள சிறிலங்கா அணியை ஆகஸ்ட் 1ஆம் திகதி இந்திய அணி எதிர்கொள்ளும்.



முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றது.

300 ஓட்டங்களைப் பெறக் கூடிய வாய்ப்புகள் இருந்தும் அவற்றை இந்திய வீரர்கள் தவற விட்டிருந்தனர். துடுப்பாட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் 18 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். சேவாக் 81 ஓட்டங்களைப் பெற்றதுடன் கங்குலி 79 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

இத்தொடரில் ஒரு போட்டியைத் தவிர ஏனைய போட்டிகளில் சிறப்பாக ஆடிவந்த ராவிட் ஒரு ஓட்டத்தைப் பெற்று ஆட்டமிழந்தார். யுவராஜ் சிங் 50 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இவர் மிக வேகமாக 45 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே ஆசியக் கிண்ணப் போட்டியில் பெறப்பட்ட வேகமான அரைச் சதமாகும். பார்த்தீவ் பட் டேல் 13 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் லசித்த மாலிங்க 2 விக்கெட்டுக்களையும், நுவான் சொய்ஸா, மாஹ்ரூப், ஜெயசூரியா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 272 ஓட்டங்களை



பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிறிலங்கா அணி சொற்ப ஓட்டங்களுக்கு தனது ஆரம்ப இரு விக்கெட்டுக்களை இழந்தபோதும் அதிரடி ஆட்டக்காரர் சனத் ஜெயசூரியவின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்த போதும் சனத் ஜெயசூரியவின் ஆட்டமிழப்பு இந்தியா அணியின் வெற்றி வாய்ப்பை பிரகாசமாக்



கிய துடன் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 267 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தியது. துடுப்பாட்டத்தில ஜெயசூரிய 132 பந்து வீச்சை எதிர்கொண்டு 130 ஓட்டங்களை அதிரடியாக பெற்றார். இதனைவிட டில்சான் 39, ஜெயவர்த்தன 18, சங்கக்கார 15, உபுல் சந்தன 11 ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் சகலதுறை வீரர் வீரேந்திர சேவாக் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றி வெற்றிக்கு வழி கோலியதுடன் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் தெரி வானர். இவருடன் இர்பான் பதான், சஹீர் கான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றி வெற்றிக்கு வழி திறந்தனர்.






## மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்துக்கு 210 ஓட்டங்களால் வெற்றி

இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 210 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றி மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

முதல் இனிங்சில் இங்கிலாந்து அணி 568 ஓட்டங்கள். மேற்கிந்தியத்தீவு முதல் இனிங்சில் 416 ஓட்டங்கள்.

இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 325 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுதிக் கொண்டது.

இதன்படி 477 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவு 267 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் அஸ்லி ஹைல்ஸ் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். மேற்படி போட்டியின் ஆட்டநாயகனாக ஹைல்ஸ் தெரிவானார்.

# ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் களத்தடுப்பு கட்டுப்பாட்டை நீக்கவேண்டும்

### ஜாவித் மியான்டட்



ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதல் 15 ஓவர்களில் விதிக்கப்படும் களத்தடுப்பு கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும், முன்னாள் பயிற்சியாளருமான ஜாவித் மியான்டட் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் ஒருதினக் கிரிக்கெட் போட்டியின் முதல் 15 ஓவர்களில்களத்தடுப்புக் கட்டுப்பாடுகள் விதிப்பது பந்துவீச்சாளர்களுக்கு எதிராகவே அமைந்துள்ளது. தற்போது பேட்ஸ்மேன்களுக்கே முக்கியத்துவம் தருகிறோம். பந்து வீச்சாளர்களின் பங்கை உணருவதில்லை. வளர்ந்து வரும் கிரிக்கெட் நாடுகள்தான் இக்கட்டுப்பாட்டால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன. தலைசிறந்த அணிகளின் பந்து வீச்சாளர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. உலகிலேயே மிகவும் வேகமாக பந்துவீசக்கூடியவரான பாகிஸ்தான் சோகைப் அக்தர், வளர்ந்து வரும் இந்தியாவின் இர்பான் பதான் ஆகியோரும் இக்கட்டுப்பாட்டால் சோர்ந்து விடுவதை காண்கிறோம். இக்கட்டுப்பாட்டால் அவர்கள் ஓட்டங்கள் அதிகளவில் ஓட்டங்களை தருவதை தவிர்க்க முடியவில்லை. அதேபோல் துடுப்பாட்ட வீரர்களின் திறனும் பாதிக்கப்படுகிறது. அதிரடியாக அடித்து ஆடக்கூடியவர்களுக்கே தற்போது மரியாதை உள்ளது. ஒரு பந்தை எப்படித் தடுத்து ஆடுவது என்பது கூடத் தெரியாதவர்கள் தலைசிறந்த துடுப்பாட்டக்காரர்களாக உள்ளனர். இதற்குக் காரணம் களத்தடுப்புக் கட்டுப்பாடே. ஒரு அணி முதல் 15 ஓவர்களில் எடுக்கும் அதே அளவு ஓட்டங்களையே அதற்கடுத்த 35 ஓவர்களில் எடுக்கின்றன இந்தக் கட்டுப்பாட்டை முழுவதுமாக நீக்கினால் சிறந்த போட்டிகளை நாம் எதிர்பார்க்க முடியும். சிறிய அணிகள்கூட மிகச் சிறந்த அணிகளுக்கு எதிராகச் சிறப்பாக விளையாட முடியும் எனத்தெரிவித்தஅவர், இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதானுக்கு மிகச் சிறந்த எதிர்காலம் உள்ளது. இடது கைப் பந்து வீச்சாளராகவும், மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சிறந்த ஆல்ரவுண்டராக அவர் உருவாகச் சிறந்த வாய்ப்புள்ளது. எந்த அணிக்கும் பயிற்சி அளிக்க நான் தயாராக உள்ளேன். அது இந்தியாவாக இருந்தாலும் சரி என்றார் மியான்டட்.

## போல்வால்ட் பிரிவில் இங்கிலாந்து வீரர் உலகசாதனை

இங்கிலாந்தின் பிர்மிங்ஹாமில் நடைபெற்ற சர்வதேச தடகளப் போட்டியில் போல்வால்ட் பிரிவில் 4.89 மீற்றர் உயரம் தாண்டி புதியஉலக சாதனை புரிந்தார். ரஷியாவின் எலினா இலின்பயேவா ஜூன் 27ஆம் திகதி 4.87 மீற்றர் உயரம் தாண்டி உலக சாதனை புரிந்தார். இஸின்பயேவா. சகநாட்டு வீரர்களை ஸ்வேத்லேனா பிய.்.பனோவா 4.88 மீற்றர் உயரம் தாண்டி ஜூலை 4ஆம் திகதி அச்சாதனையை முறியடித்தார்.

## ஒலிம்பிக் வீரர்களுக்கு முழுப் பயிற்சி அளிக்கப்படுகிறது

ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ள அனைத்து வீரர்களுக்கும் தேவையான அனைத்துப்பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. என்று மத்திய விளையாட்டுத்துறை இணைச்செயலர் ஆர்.கே.மிஷ்ரா தெரிவித்தார். தகுதி பெற்றுள்ள அனைவரும் தேவையான அனைத்துப்பயிற்சிகள் உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றார் அவர். இந்தியா முதல்முறையாக மிகவும் அதிகபட்சமாக 75 வீரர்களை ஒலிம்பிக் போட்டிக்கு அனுப்புகிறது. முதல்முறையாக அனைத்து வீரர்களும் தங்கள் பயிற்சியாளர்களுடன் வெளிநாடுகளில் பயிற்சி மேற்கொண்டுள்ளனர் என்றார் அவர். கர்நாடக ஒலிம்பிக் சங்கம் சார்பில் பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்குச் செல்லும் வீரர்களை வாழ்த்தும் நிகழ்ச்சியில் பங்கேற்ற மிஷ்ரா இதைத் தெரிவித்தார்.

## நம்பிக்கை அளிக்கும் அஞ்சு, பினு!

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் இந்தியத்தடகள வீரர், வீராங்கனைகளில் அஞ்சு பாபி ஜார்ஜும், கே.எம்.பினுவும் பதக்கம் வெல்லும் வாய்ப்புள்ளது என்று இந்தியாவின் முன்னாள் தடகள வீராங்கனை ஷைனி வில்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். தவிர அஞ்சலி பாகவத் (துப்பாக்கி சுடுதல்), குஞ்சராணி, கர்ணம் மல்லேஸ்வரி(இருவரும் பளுதூக்குதல்) ஆகியோரும் நம்பிக்கை அளிக்கக்கூடிய வர்களே எனத் தெரிவித்துள்ளார். அணித் தேர்வாளராக, இப்போதுள்ள இந்தியத்தட கள வீரர்களின் திறமைகளை நேரில் பார்த்துள்ளேன். இதில் அஞ்சு பாபி ஜார்ஜும், பினுவும் பதக்கம் வெல்லக் கூடியவர்களாக உள்ளனர்.பல்வேறு போட்டிகளில் தனது திறமைகளை அஞ்சு தொடர்ந்து மேம்படுத்தி வருகின்றார். பினுவும் 800 மீற்றர் ஓட்டத்தில் தனது திறமையை மேம்படுத்தி வருகிறார். இவர்கள் இருவரும் இந்தியாவுக்குப் பதக்கம் வென்று தருவார்கள் என்ற பெரும் நம்பிக்கை உள்ளது. இங்கிலாந்தில் மேற்கொண்ட பயிற்சியை அடுத்து பாபிஅலாய்சியாஸும் தனது திறமையை மேம்படுத்திக் கொண்டுள்ளார்.



அஞ்சு

## பிரபல காரப் பந்தய வீரர் மைக்கல் சூமாக்கர் ஜேர்மன் குரோன்றி காரப்பந்தயத்தில் பட்டம் வென்றார்

ஜேர்மன் குரோன்றி கார்ப் பந்தயத்தில் மைக்கல் சூமாக்கர் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இவ் வருடத்தில் நடைபெற்ற 12 காாப் பந்தயங்களில் மைக்கல் சூமாக்கர் ஈட்டிய 11 ஆவது வெற்றி இதுவாகும். ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல கார்ப் பந்தய வீரரான மைக்கல் சூமாக்கர் இவ் வருடத்தில் மிகச்சிறப்பான முறையில் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

தனது தாயகத்தின் நகர் ஒன்றில் நடைபெற்ற ஜேர்மன் குரோன்றி கார்ப் பந்தயத்தில் ஆரம்பம் முதலே முன்னணியில் திகழ்ந்த மைக்கல் சூமாக்கர் சகபோட்டியாளர்களை விடப் பெரும் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.2002 ஆம் ஆண்டில் 12 கார்ப் பந்தயங்களில் 11 இல் வெற்றி பெற்றதைப் போன்று இவ்வாண்டிலும் சூமாக்கர் வெற்றிகளைக் குவித்துள்ளார்.

இது சூமாக்கர் தனது வாழ்நாளில் கைப்பற்றிய 81 ஆவது குரோன்றி சம்பியன் பட்டமாகும். இதுவரை ஆறு முறை உலக கார்ப் பந்தய போட்டியில் சூமாக்கர் சம்பியன் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### சிந்தனைக்கு



மக்களின் ஆதரவுடன் மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூக சீரமைப்புக்களே, நிரந்தரமானதாக நிலைத்து நிற்கும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 28-07-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com


## முன்னேற்றம் இன்றி!

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனின் இம்முறை இலங்கைக்கான விஜயமும் முன்னேற்றம் எதுவுமற்ற நிலையிலேயே உள்ளது. அதாவது சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எதுவித முன்னேற்றமும் காணப்படாமை காரணமாக சமாதான முயற்சிகளைப் பேச்சுவார்த்தை நோக்கி முன் நகர்த்த முடியாததொரு நிலையே காணப்படுவதுபோல் தோன்றுகின்றது.

நோர்வேயின் உயர் மட்டக் குழுவினர் கடந்த மூன்று தடவைகள் மேற்கொண்ட இலங்கைக்கான விஜயங்களிலும் பெரும் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை. பேச்சு வார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது குறித்து ஆராயப்படுவதாகக் கூறப்படுகின்றதேயொழிய அவ்விடயம் குறித்து முன்னேற்றகரமான முடிவுகள் எவையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அரசாங்கத் தரப்பில் இருந்து புதிதாக எதையும் கூறும் அளவிற்கு எடுத்துவரவில்லை என அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். இந் நிலையில் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காண்பதென்பது சாத்தியப்பாடானதொன்றாக இருக்கப்போவதில்லை.

விடுதலைப்புலிகளைப் பொறுத்து அவர்கள் ஒரு தெளிவான நிலைப்பாட்டுடன் உள்ளனர். அதாவது இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தாம் தயார் என்பதே அதுவாகும். கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இந்நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ள அவர்கள் தமது நிலைப்பாடடிற்கான நியாயப்பாட்டையும் சகலருக்கும் தெளிவுபடுத்தியும் உள்ளார்.

இதேவேளை தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டிற்குத் தமது பூரண ஆதரவை வழங்கும் வகையில் தேர்தலில் வாக்களித்துள்ளனர். அத்தோடு பல சர்வதேச நாடுகளும் பல அரச சார்பற்ற நிறுவனங்களும் புலிகளின் நிலைப்பாட்டில் உள்ள நியாயப்பாடாகப் புரிந்து கொண்டும் உள்ளன. இவற்றில் சில இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொண்டும் உள்ளனர்.

இதேவேளை இடைக்கால நிர்வாகம் தொடர்பான நிலைப்பாட்டை விடுதலைப்புலிகள் எவ் வேளையிலும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதும் ஏற்கனவே உறுதி செய்யப்பட்டதொன்று. ஏனெனில் தமிழ் மக்களின் உரிமைகளை விட்டுக்கொடுத்தல் என்பது சாத்தியப்பாடான தொன்றல்ல என்பது புலிகளால் ஏற்கனவே கூறப்பட்ட விடயமாகும். அத்தோடு விடுதலைப்புலிகள் போதியளவில் விட்டுக்கொடுப்புச் செய்து இறங்கி வரக்கூடிய அளவிற்கு இறங்கி வந்தும் விட்டனர்.

ஆனால் அரசாங்கத் தரப்பின் நிலைப்பாடு என்பது அவ்வாறானதாக இல்லை. அரசாங்கத்தின் நிலைப்பாடானது நேரத்திற்கு நேரம் ஆளுக்கு ஆள் என்ற நிலையில் மாறுபடுவதாகவுள்ளது. சனாதிபதி சந்திரிகா ஒரு வேளை ஒன்று பேசுகின்றார் ஆட்சியில் பங்கேற்கும் முக்கிய கூட்டணியான ஜே.வி.பியோ ஒட்டுமொத்தமாக இ.த.அ. திட்டத்தையும் சகல அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தையும் நிராகரிக்கின்றது.

இதனால் தான் சமாதான முயற்சிகளில் ஈடுபடும் நோர்வேத் தரப்பு அடிக்கடி ஏமாற்றத்திற்கு உள்ளாவதோடு வெறும் கையோடும் திரும்ப வேண்டியதாகிறது. இது நோர்வேத் தரப்பிற்கு சலிப்பூட்டுவதாக மட்டுமல்ல சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த எதிர்பார்ப்புடனும் இருக்கும் தமிழ் மக்களுக்கும் ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாகவுள்ளது. இதனால் சமாதானத்தின் மீதான அவ நம்பிக்கை தீவிரமாகி வருகிறது.

இந் நிலை மாற்றம் காணப்பட வேண்டுமானால் முதலில் நோர்வேத் தரப்பு சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெளிவாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். கொழும்பிற்கான விஜயங்களை மேற்கொள்ளும் முன்பாக அரச தரப்பினருடன்- அதிகாரிகள் மட்டத்தில் அல்லாது- அரசியல் தலைவர்கள் மட்டத்தில்- சந்திப்புக்களை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். இச்சந்திப்புக்கள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் முன்னேற்றம் எதுவும் காணப்பட்டதா என்பதைப் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

அவ்வாறு இல்லாது விட்டால் நோர்வே உயர் மட்டக் குழுவினர் கூட வெறும் கையுடன் திரும்ப வேண்டியதாகவே இருக்கும். ஏனெனில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வும், நீதியான தீர்வு காண்பதற்கும் அன்று போலவே இன்றும் தயாராகவில்லை. தமது அரசியல், பொருளாதார, இராணுவ நெருக்கடிகளைச் சற்று தணித்துக்கொள்வதற்காகவே நோர்வேயின் உதவியை / மத்தியஸ்தத்தை நாடி நிற்கின்றனர். இது புரிந்துகொள்ளப்படாமல் மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் ஏற்படும் ஏமாற்றத்திற்கு தமிழர் தரப்பு எந்த வகையிலும் காரணமாக மாட்டாது.

# வடகிழக்கு அபிவிருத்தி தொடர்பில் புலிகளை முக்கிய தரப்பாக கருதுகிறோம்

### - உலகவங்கிப் பணிப்பாளர் பீற்றர் கரோல்ட்

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் இடம்பெறும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது விடுதலைப்புலிகள் அமைப்பை முக்கிய தரப்பாக உலக வங்கி கருதுவதாக இலங்கைக்கான உலக வங்கி பணிப்பாளர் பீற்றர் கரோல்ட் தெரிவித்துள்ளார்.

தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பு உலகவங்கிக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் உலக வங்கியின் 2004 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் தமிழ்ப் பிரதியை விடுதலைப்புலிகளிற்கு வழங்கியமைக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

இதற்குப் பதிலளித்து வெளியிட்ட அறிக்கையில் பீற்றர்கரோல்ட் விடுதலைப்புலிகளிற்கு நேரடியாக நிதி உதவிகள் வழங்கப்படுவதில்லை என தெரிவித்தார். இலங்கைக்கான நிதி உதவிகள் அனைத்தும் மத்திய அரசு ஊடாகவே வழங்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவி வழங்கும திட்டங்களுடன் தொடர்புடைய அனைவருடனும் கலந்துரையாடும் அதிகாரம் தமக்குள்ளதாக அவ்வறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கிற்கான அபிவிருத்தி திட்டங்கள் தொடங்கும் போது உலக வங்கி மட்டுமன்றி இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளை பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொண்டு செயற்படவிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க ஹெல உறுமய பா.உ.களை விலைக்கு வாங்க முயற்சி

அடுத்த மாதம் பாராளுமன்றத்தில், அரசாங்கம் எப்படியும் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதற்கு கடும் முயற்ச்சிகளை மேற்கொண்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் ஒரு அங்கமாக ஜாதிக ஹெல உறுமயவின் உயர் மட்ட உறுப்பினர்களுக்கு பெருந் தொகைப் பணத்தை வழங்கி அக்கட்சியின் ஆதரவைப் பெற்றுவிட முயல்வதாக இரகசியத் தகவல்கள் கசிந்துள்ளன.

இத்தகைய இரகசிய நடவடிக்கைகளுக்கென முக்கிய அமைச்சர் ஒருவர் தலைமையில் மூன்று முக்கிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இவர்களூடாக ஹெல உறுமய கட்சியின் உயர் மட்டத் தலைவர்களைத் தொடர்பு கொண்டு, அதன் ஆதரவைப் பெற்றுவிட ஆளும் கட்சி அதீத முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இதற்கிடையில், இது குறித்துக் கருத்துக் கூறிய ஹெல உறுமயவின் பிரதம செயலாளர் வண. உடுவ தம்மலோக தேரோ, தங்களது கட்சியை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, எந்தவொரு கட்சியும் சுயலாபம் தேடிக்கொள்வதைத் தாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்றும், ஆளும் கட்சிக்குத் தங்களது ஆதரவை வழங்குவது குறித்து எந்த முடிவும் இது வரை எட்டப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் அரசாங்கம் தமது பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியுடனும் பலவித சலுகைகள் குறித்து அலசி ஆராய இன்னுமொரு உயர்மட்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு செயலாற்றி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (32)

# கொட்டாவ சம்பவம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் கண்டனம்

(கொழும்பு)

கொட்டாவாவில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பான கண்டனத்தை சிறிலங்கா அரசாங்கம் உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ளது.

எண்மரைக் கொலை செய்த இந்தப் பயங்கரவாத நடவடிக்கை பொலிசாருக்குத் தெரிய முன்பே இது பற்றிய தகவல்கள் இணையத்தில் வெளிவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிசார் மேற்படி இந்தச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களையும், கொலையாளிகளையும் இனங்காணுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு,இப் பயங்கரவாதச் சம்பவமானது போர் நிறுத்த உடன்படிக்கைக்கு ஆதரவான போக்கைக் கடைப்பிடிப்பதாகவோ அல்லது விடுதலைப்புலிகளுக்கும் அரசிற்குமிடையேயான நேரடிப் பேச்சை ஆரம்பிப்பதற்கான உறுதியைத் தருவதாகவோ அமையாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் அரசு பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகளைத தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் என்றும் நாட்டின் சட்டம், ஒழுங்கு என்பவற்றை பேணுவதற்கு முயற்சிக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட வரான நீல் தம்மிக வெலிகந்தையைச் சேர்ந்தவரென்றும், இவர் ஏற்கனவே மட்டக்களப்பில் பணியாற்றியவர் என்றும் குகநேசன் உட்பட விகாரையில் வைத்து கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கான ஏற்பாட்டை இவரே செய்தார் என்றும் தெரியவந்துள்ளது.

பல புனைபெயர்களை கொண்ட இவர், சமீபகாலம் வரை கொழும்பில் கருணாவைத் தேவையான இடங்களிற்கு அழைத்துச் செல்லும் சாரதியாக-பாதுகாவலராக இருந்தார் என்றும் தெரியவருகிறது.மேற்படி இந்தச் சம்பவம் நடந்த வீட்டில் மொத்தம் 10 ஆண்கள் இருந்ததாகவும் அவர்களில் இருவரே இக் கொலைகளைச் செய்து விட்டுத் தப்பியிருக்கலாம் என்றும் பொலிசார் சந்தேகிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

# மதமாற்றத் தடைச்சட்டத்தை போட்டாலும் வறிய பௌத்தர்கள் மதமாற்றத்தை தடுக்கமுடியாது

### மல்வத்த மகாநாயக்கர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டில் பௌத்தர்கள் மதம் மாறுவதைத் தடுக்கச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றினாலும் கிராமங்களில் உள்ள வறிய பௌத்த மக்கள் மாற்று மதங்களுக்கு செல்வதை தடுக்க முடியாது எனவும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு வழிகளை முதலில் கண்டுபிடித்து அதற்கான பரிகாரத்தை செய்யுங்கள் எனவும் மல்வத்த மகாநாயக்கர் தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக பௌத்த ஆலயங்கள் பௌத்த குருமார்கள் தாக்கப்படுவதையும், கொலை செய்யப்படுவதையும் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சு வாகனத்தை வைத்திருந்தார் முன்னாள் அமைச்சரின் செயலர் கைது

(கொழும்பு)

அமைச்சு வாகனத்தை தன்சொந்தப் பாவனையில் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு முன்னாள் அமைச்சின் செயலாளர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் அமைச்சரான மகிந்த விஜேசேகராவிற்கு இணைச் செயலாளராக இருந்த ஆனந்த அபயவிக்கிரம என்பவரே கைதானவர் ஆவார்.

புனர்வாழ்வு அமைச்சின் வாகனத்தை தன் சொந்தமாக வைத்திருந்தமைக்காகவே இவரை மாத்தறைப் பொலிசின் விசேட புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து மாவட்ட நீதியாளர் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியுள்ளதாக ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# மட்டு-திருமலை பாதையை திறப்பதற்கு இணக்கம்

திருக்கோணமலை மட்டக்களப்பு தரைவழிப் பாதையை திறப்பதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். விரைவில் இப்பாதையில் சேவைகள் இடம்பெறும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.A 15 என அழைக்கப்படும் இவ் வீதியில் 3 மிதவைப்பாதைகளைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும். இதற்காக தலா 3 மில்லியன் பெறுமதியான மிதவைப்பாதைகள் கிண்ணியாவுக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. இவை உப்பாறு, கெங்கை, மூதூர் ஆகிய துறைகளில் சேவையில் ஈடுபடுத்தப்படும். 1985ம் ஆண்டு தொடக்கம் இத தரைவழிப் போக்குவரத்து தடைபடுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மூத்த சட்டவாளர் அருமைநாயகத்திற்கு கிளி. மாவட்ட நீதிமன்றில் அஞ்சலி

(அலுவலகசெய்தியாளர்)

உண்மைக்காகவும் நேர்மைக்காகவும் சட்டவாளர்களும் சக பணியாளர் களும் செயற்பட்டு நீதியை நிலைநாட்ட வேண்டும். இவ்வாறு தமிழீழ நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா தெரிவித்துள்ளார்.

தமிழீழ நீதிமன்றத்தில் சட்டவாளராகப் பணியாற்றி அண்மையில் கொழும்பில் மரணமான மூத்த சட்டவாளரும் உயர் நீதி மன்ற நீதியாளருமான அருமைநாயகம் அவர்கள் ஞாபகமாக கிளி.மாவட்ட நீதிமன்றில் இடம் பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து அஞ்சலி உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:அருமைநாயகம் அவர்கள் பல நெருக்கடிகள் மத்தியிலும் எமது நீதிமன்றத்தில் மிகவும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றினார். ஏனைய பல சட்டவாளர்கள் எமது கட்டுப்பாட்டுப் பகுதி களுக்கு அப்பால் சென்று சிறிலங்கா நீதிமன்றங்களில் கடமையாற்றினார்கள் ஆனால் அருமை நாயகம் அவர்கள் தமிழீழ மக்களுக்கு சிறப்பான முறையில் கடமையாற்ற வேண்டுமென்பதற்காக இங்கே கடமையாற்றினார்.

வறுமைப்பட்ட மக்களின் உரிமைக்காக பல வழக்குகளில் பங்கு கொண்டு அந்த மக்களுக்கு நீதி தேடிக்கொடுத்தவர். அவர்களின் சுதந்திரம் அவர்களுக்கானதென்ற குறிக்கோளுக்கமைவாக செயற்பட்டவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். நேற்று நண்பகல் 12.00 மணிக்கு கிளி.மாவட்ட நீதிமன்றில் உயர் நீதிமன்ற நீதியாளர் அல்லிராணி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அஞ்சலி உரையை நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, சட்டவாளர் குலசங்கர் ஆகியோர்நிகழ்த்தினர். (லோ,தீ)

## இடைக்கால...

நேரமாக நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. அவ்வேளை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருடன் நடாத்திய பேச்சுவார்த்தை தொடர்பாக ஹெல்கேசன் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

அத்துடன் கருணா விவகாரம் சமாதான நடவடிக்கைகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அரசாங்கம் கருணா குழுவிற்கு உதவி வருவது கொட்டாவ சம்பவத்திலும்கூட உறுதிப்படுத்தப்பட்டிருப்பதை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தன்னிடம் சுட்டிக்காட்டியிருப்பதாகவும், எனவே, அவ்வாறான தொடர்பாலே சமாதான முயற்சிகள் தடைப்பட்டிருப்பதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் கூறியிருப்பதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

சனாதிபதியைப் பொறுத்தவரை தனது அரசாங்கத்திற்கும் அத்தொடர்பிற்கும் சம்பந்தமே இல்லையெனக் கூறியிருப்பதுடன், 2000ஆம் ஆண்டு சனாதிபதியால் முன்மொழியப்பட்ட தீர்வுப் பொதியை சற்று அதிகாரங்களைக்கூட்டி இதை இறுதித் தீர்வாகச் சமர்ப்பிப்பதற்கும் அந்த இறுதித் தீர்வைச் சமர்ப்பிக்கும் நேரத்திலேயே இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வழங்குவதற்குமான ஒரு யோசனையை மீண்டுமொரு முறை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரிடம் சனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கின்றார். எனினும் அரசாங்கத்தின் இறுதி முடிவை அவர் கூறவில்லை. இந்தத் தீர்வுப் பொதி முன்னரே விடுதலைப்புலிகளால் நிராகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சமாதான முயற்சிகளின் அடுத்த கட்ட நகர்வை முன்கொண்டு செல்வதற்கு என்ன செய்யலாம் என்பது குறித்தும் இதன்போது ஆராயந்துள்ளனர்.

இது தொடர்பாக சனாதிபதி தரப்பலிருந்தோ, நோர்வேத் தரப்பில் இருந்தோ முழுமையான தகவல் எதுவும் வெளிவரவில்லை.

இந்நிலையில் சனாதிபதியைச் சந்தித்த பின் விதார் ஹெல்கேசன் நேற்றிரவு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடினார். (32)

## பாதுகாப்பு...

அப்பாவிப் பொது மக்களின் உடலங்கள் கிளிநகரம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட பின்னர் பல்வேறு பகுதிகளிலிருந்தும் எலும்புக்கூடாக மீட்கப்பட்டு இனங் காணப்படாத நிலையில் அவற்றை தமிழீழ காவல்த்துறையின் கிளிநொச்சி காவல் பணிமனையினர் பாதுகாத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சி காவல் பணிமனைக்கு விஜயம் செய்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகளான சர்வதேச செஞ்சிலுவைச் சங்க (ஜெனிவா) தடயவியல் நிபுணர் மொறிஸ், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மல்லாவி பாதுகாப்பு உத்தியோகத்தர் பாமிலா,வெளிக்கள அலுவலர் செல்வராசா ஆகியோர் அடங்கிய குழுவினர் தமிழீழ காவல் துறையின் பிரதம பரிசோதகர் றஞ்சித்குமார் உபபரிசோதகர் இ.றொய்காந் ஆகியோர் காவல் பணிமனையில் சந்தித்து மேற்படி எலும்புக்கூடுகள் தொடர்பாகவும் அதனை கண்டெடுத்துவரும் முறைகள் பற்றியும், அதன்போது எதிர்கொண்ட பிரச்சனைகள் பற்றியும் தற்போது அவற்றை பாதுகாத்து வரும் முறைகள் பற்றியும், பாதுகாப்பதில் எதிர்கொள்ளும் கஸ்ரங்கள் பற்றியும் கேட்டறிந்தனர். பின்னர் எலும்புக்கூடுகளை பார்வையிட்ட செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பெரும் கஸ்ரங்களின் மத்தியிலும் இவ்வாறு மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளை பாதுகாத்து வருவது மிகவும் மகிழ்ச்சி. யுத்த காலங்களில் இதனை பாதுகாக்க வேண்டும் என்பதில் நீங்கள் அக்கறையுடன் செயல்பட்டு இவற்றை பத்திரப் படுத்துவதற்கு நீங்கள் பட்ட துயரங்கள் அளப்பெரியது எனினும் போதிய வசதிகள் இல்லாத நிலையில் இவற்றை கவனமாக பாதுகாத்து வருவது கஸ்ரமானதுதான் ஆனாலும் நீங்கள் இப்போது பாதுகாத்து வருவது போலவே இதனை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டும் எனவும் கூறினர்.

இவ்வாறான எலும்புக்கூடுகளை ஆராய்வதற்காக தாம் ஒரு குழுவை நியமிக்க இருப்பதாகவும் தெரிவித்த அவர்கள் இங்குகாணப்படும் எலும்புக்கூடுகளில் அதிகளவானவை கொடூரமான தாக்குதல்களினாலும், குண்டு வெடிப்புக்களினாலும் கழுத்து நெரிக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் தனக்குத் தெரிவதாகவும் தெரிவித்தார். (லோ,தீ)

## அன்ரன்...

தற்போது கொழும்பில் சிறிலங்காவின் சனாதிபதி மற்றும் பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்திவரும் அவர் வெள்ளிக்கிழமை அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்திக்கவுள்ளார். இச்சந்திப்பில் அவருடன் இலங் கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்காரும் கலந்து கொள்வார்.

## இறைச்சி...

செய்தியில் சில தவறுகள் இடம் பெற்றுள்ளன.

அதில் ஒரு கிலோ மாட்டிறைச்சியின் விலை 85 ரூபா எனக்குறிப்பிடப்பட்டுள்ளமையானது உயிர் விலை ஒரு கிலோ 85 ரூபா என்பதே சரியாகும் இதுவரை காலமும் உயிர் விலை 65 ரூபாவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் விற்பனைகள் யாவும் கற்பகம் வாணிபத்தினூடாக மேற்கொள்ளலாம். எனக குறிப்பிடப்பட்டிருப்பினும் மருதம் வாணிபத்தினூடாக மேற்கொள்ளலாம் என்பதே சரியானதாகும்.

இதேவேளை பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளமையும் தவறாகும் சொப்பிங் பை பாவனை முற்றாகத் தடை செய்ப்படுகின்றது என்பதே சரியானதாகும்.

## போராளிகளின்...

தித் தொழிற்சாலைத் திறப்புவிழாவில் அவர் இதனைத் தெரிவித்தா.

அவர் மேலும் உரையாற்றுகையில்; எங்கள் தேசியத்தலைவரினுடைய நீண்ட நோக்கத்தின் - எதிர்பார்ப்பின் ஒன்றான இந் நடவடிக்கையை நிறைவேற்றுவதற்காக டெக் நிறுவனம் எடுத்துக்கொண்ட இந்த முயற்சியானது மிகவும் பாராட்டத்தக்கதொன்றாகும்.

ஏனெனில் இந்த பிரதேசத்தில் உப்பு உற்பத்தி ஆலை இருந்த காலப்பகுதியில் எத்தனையோ தொழிலாளர்கள் இந்த ஆலையிலே பணிபுரிந்தார்கள் இந்த ஆனையிறவுப் பிரதேசத்தை நோக்கி எத்தனை குடும்பங்கள் வந்து பணியினைச் செய்து வாழ்ந்து வந்தார்கள். இது முற்றுமுழுதாக எதிரியினுடைய ஆக்கிரமிப்புக்குட்பட்டு மீண்டும் பெரியதோர் யுத்தத்தின் மூலம் மீட்கப்பட்டு மீண்டும் முன்பு பணியாற்றிய பணியாளர்கள் அதிகாரிகள் ஆகியோர் தொழில் புரிவதைப்பார்க்கும்போது மகிழ்ச்சியாகவே இருக்கிறது முன்பு பணியாற்றிய பணியாளர்களும் அதிகாரிகளும் ஒவ்வொரு உற்பத்திச் செயற்பாட்டிலும் மகிழ்ச்சியாகவும் ஆர்வத்துடனும் செயற்பட்டு வருகின்றார்கள். இந்த ஆலையினுடைய உற்பத்திகள் மேலோங்கிச் செல்கின்ற போது எங்கள் மக்களுக்கான அயடீன் குறைபாட்டினைப் போக்க உப்பில் அயடீனைக் கலந்து விநியோகிப்பதன் மூலம் தீர்ப்பதற்காக டெக் நிறுவனம் எடுத்த முயற்சியையும் அதற்குத் துணையாக யுனிசெப் நிறுவனம் எடுத்த முயற்சியையும் நாங்கள் பாராட்டுகின்றோம். அவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம். ஏனெனில் எங்கள் மக்களின் உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான அயடீனை உப்பினூடாக வழங்க முயற்சியெடுத்துச் செயற்பட்ட டெக் நிறுவனம் இந்தத் திட்டத்தினைத் தயாரித்து அளித்தபோது யுனிசெப் நிறுவனத்தினரும் இணைந்து இந்த நிறுவனத்திற்கு உதவிபுரிந்து உற்பத்தி உபகரணங்களையும் அதற்கான தொழிற்சாதனங்களையும் நிதிகளையும் ஒதுக்கித் தமது பணியினைச் செய்திருக்கின்றார்கள். என்ற வகையில் அவர்களுக்கும் நாங்கள் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றோம். இந்த உற்பத்திகள் எமது மக்களைச் சென்றடைய இந்த நிறுவனம் தமது செயற்பாட்டினைத் திறம்படச் செய்ய வேண்டுமென்று இன்றைய நாளிலே இந்த நிறுவனம் சார்ந்த பணியாளர்கள் இந்த உற்பத்தி ஆலையினுடைய பொறுப்பாளர்கள் அனைவரையும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தப் பிரதேசம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பெரும் பிரதேசம். ஆண்டாண்டு காலங்களாக முன்னர் இருந்த இராணுவ ஆதிக்க சக்திகளினால் இந்தப் பிரதேசம் தடைப்பட்ட பிரதேசமாகத் தடை முகாமாகவே இருந்திருக்கிறது.

பின்னர் எமது தேசியத் தலைவருடைய நெறிப்படுத்தலிலே இந்த பெருந்தளம் பல போராளிகளுடைய வரலாற்றுத் தியாகத்தால் விடுதலை பெற்றதும் அதன் போது இருந்த சூழல் இன்று மாறி எதுவித தடைகளுமின்றி எதுவித சோதனைகளுமின்றி மக்கள் பயணத்தினை மேற்கொள்வதோடு இந்த பிரதேசத்திலே மீண்டும் இந்த உற்பத்தி ஆலை அமைக்கப்பெற்று சிறப்புற இயங்க எமது தேசியத் தலைவர் எமது பொறுப்பாளர்கள் சார்பாகவும் போராளிகள், மக்கள் சார்பாகவும் எமது வாழ்த்துக்களை இந் நிறுவன வளர்ச்சிக்கு உழைக்கும் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

டெக் நிறுவத்தினதும், யுனிசெப் நிறுவனத்தினதும் நிதியுதவியோடு தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் புதிதாக அமைக்கப்பட்ட இந்நிறுவனத்தினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் நெறிப்படுத்தி நடாத்தி வருகின்றனர். இந்நிறுவனத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. மதியம் 1.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வின் பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.பி. அமலராஜாவும், உப்பு உற்பத்தி நிறுவன மூத்த பணியாளரும் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் கரிகாலன் அவர்கள் ஏற்றினார். மங்கள விளக்கினை யுனிசெப் நிறுவன நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் பெனிபுரூவும், பொருண்மிய மதியுரையகத்தைச்சேர்ந்தசுகுணனுவும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து உப்பு உற்பத்தி நிறுவனத்தின் களஞ்சியத்தினை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளர் மத்தியாஸ் அவர்கள் திறந்து வைக்க, தொழிற்கூடக் கட்டடத்தினை ஏ.டி அதிகாரி அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்ததோடு, பெயர்ப் பலகையினையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

அடுத்து உப்பு உற்பத்தி நிறுவனத்தின் ஆய்வு கூடத்தினை தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திறந்து வைத்ததோடு, பெய்ர்ப்பலகையினையும் திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து உப்பு உற்பத்தி நிறுவனத்தின் பொதுப் பெயர்ப்பலகையினை உப்பு உற்பத்தி நிறுவனத்தின் பிரதிநிதி திறந்து வைத்ததோடு அரங்க நிகழ்வுகள் ஆரம்பமானது. இந்நிகழ்விற்கு தமிழீழ பொருண்மிய மதியுரையகத்தின் இயக்குனர் சுந்தரமூர்த்தி தலைமை தாங்கினார்.

நிகழ்வில் சிறப்புரைகளை தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஏ.டி கணபதிப்பிள்ளை யுனிசெப் நிறுவனத்தைச் சேர்ந்த பெனி புரூ, தமிழீழ தொலைக்காட்சி சேவையின் பொறுப்பாளரும் டெக் நிறுவன பிரதிநிதியும் நிகழ்த்தினார்கள். இவ் உப்பு உற்பத்தி நிறுவனமானது தற்போது நவீன இயந்திர சாதனங்களுடனும் அயடீன் எனும் கனிப்பொருளை உப்போடு சேர்க்கக் கூடிய இரசாயன தொழில் நுட்பத்துடனும் 70 இற்கும் மேற்பட்ட பணியாளர்களின் அயராத உழைப்புடனும் இயங்கிவருவதோடு இலங்கையின் உப்பு உற்பத்தி நிறுவனங்களில் அனைத்தையும் விடத் திறமான உப்பினை உற்பத்தி செய்து விநியோகிக்கின்ற சிறப்பான நிறுவனமாகவும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வீரவணக்கம்



மணலாறு நேரடி மோதல்

**லெப். கவிதன்**

**சின்னராசா இந்திரகுமார்**

பிறப்பு 07.03.1969

வீரச்சாவு 28.07.1995

மணலாறு மண்ணில் சமர் செய்து
மாண்டீர்கள் ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
மாளாத உன் இலட்சியச் சுவடுகளை
மாண்புற அஞ்சலி செய்கின்றோம்.

இல. 23,
சிவபுரம்
வவுனிக்குளம்.

(சி-10026)

சித்தப்பா குடும்பம்.

## துயர் பகிர்கின்றோம்

**அமரர் திரு.ஆ.அருமைநாயகம்**

[சட்ட ஆலோசகர், தமிழீழ வைப்பகம்]

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நாம் துயர் அடைகிறோம். அன்னாருக்கு எமது கண்ணீர் வணக்கங்களையும், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாரிற்கு எமது ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பணிப்பாளர்,*
*பணியாளர்,*
*தமிழீழ வைப்பகம்.*

(சி-10043)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.